விஷு ௵ தை - மாசி ௴

ஸம்புடம் - 1
ஸஞ்சிகை - 2

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

(ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை)

OFFICE OF THE REGISTRAR OF ...
13 MAR 1942
MADRAS

ஸம்பாதகர்: ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

நெ. 5, இராமசாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

February, 1942
Vol. 1, No. 2

602

JL
இ22வை211/MW
N42/1·2.
210/00

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1.	அர்ச்சாவதார வைபவம்	33
2.	ஆசார்ய மஹிமை	39
3.	ஜ்ஞாநதாகம்	46
4.	பாசுரங்களின் பகுதி (அமலனுதிபிரான்)	49
5.	மானிடப்பேறு	56
6.	அபிநந்தநப் பத்ரிகைகள்	59
7.	செய்திகள்	61
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	63
9.	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய யாத்ரோத்ஸவம்	69

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரி]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவைபோலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

குறிப்பு :—ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியைக்கு த்ரவ்யோபகாரம் செய்தவர்களின் பெயர்களுடைய தொடர்ச்சி.

கோபிசெட்டிபாளையம் போஸ்ட், கருக்கப்பாளையம் ஸ்ரீ உப. கிருஷ்ணமாசார்யர் ... ... ரூ. 100



OFFICE OF THE REGISTRAR ...
13 MAR 1942

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	விஷு வருஷம் தை - மாசி மீ	ஸஞ்சிகை 2

“அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥”

அர்ச்சாவதார வைபவம்

[இப்பொழுது 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரால் முன்பு ஒரு கால விசேஷத்தில் உபந்யஸிக்கப்பட்டு வேதாந்த தீபிகையில் வெளிவந்த இவ்விஷயம் இங்கு மீண்டும் ப்ரசுரிக்கப்படுகிறது.]

பரவ்யூஹாதிஷு பரஸௌலப்யாதிசயேந ச ।
அர்ச்சாவதாரோ பகவாந் ஸந்நிதத்தாம் ஸதா ஹரி: ॥

பரோ வா வ்யூஹோ வா இத்யாதிகளில் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த பர வ்யூஹ விபவாந்தர்யாம்யர்ச்சைகளென்கிற ஐந்து ரூபங்களும் தைத்திரீய நாராயணீயத்தில் ஸங்க்ஷேபேண ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கின்றன. அதில் ஆநந்தவல்லியில், ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம’ என்கிற வாக்யத்தில் அநந்த சப்தவாச்யனைச் சொல்லப்பட்ட நாராயணனுக்குப் பாரம்யத்தை ப்ரதிபாதிக்கிற இந்த ப்ரஶ்நோபக்ரமத்தில்,

34
அ0/ல

"ஸஹஸ்ரவாரே ஹவநஸ்ய மத்யே
நாகஸ்ய ப்ருஷ்டே மஹதோ மஹீயாந் ।
ஶுக்ரேண ஜ்யோதீம்ஷி ஸமநுப்ரவிஷ்ட:
ப்ரஜாபதிஶ்சரதி கர்பே அந்த:"

என்கிற ப்ரதம வாக்யத்தில் இவ்வைந்து ரூபங்களும் சொல்லப்பட்டன. அதில் 'ஸஹஸ்ரவாரே ஸஹஸ்ர' என்பது பத்மநாப னென்கிற வ்யூஹத்தையும், 'ஹவநஸ்ய மத்யே' என்பது ஸூர்யமண்டலவர்த்தி விபவத்தையும், 'நாகஸ்ய ப்ருஷ்டே' என்பது பரரூபத்தையும், ஶுக்ரேண-ஶுப்ராஶ்ரித ஜ்யோதிர்மய திவ்யவிக்ரஹேண, ஜ்யோதீம்ஷி-ஸுவர்ணாதிரத்நாதீநி, ஸமநுப்ரவிஷ்ட: - 'பிம்பாஶ்ரயத்வாத்மநா பிம்பே' என்கிறபடி அநு ப்ரவிஷ்ட னென்கையாலே அர்ச்சாவதாரத்தையும், கர்பே - ஹ்ருதயே, அந்த: - ஜீவாத்மநாமந்த:ப்ரவிஷ்டஸ்ஸந், ப்ரஜாபதிஶ்சரதி என்பது அந்தர்யாமி ரூபத்தையும் சொல்லுகிறது. உபஸம்ஹாரத்திலும் ஸவா வஷட் வஷட்கார: ஸம்வயா ஸம்வாத்மா யேந ஸவமிதம் ப்ரோத மித்யாதிநா ஸாமாந்யத: பஞ்ச ரூபங்களும் சொல்லப்பட்டன. ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரரும்,

'(ஸம்வயா) ஸர்வஸ்மின்ஹவிஹவாதிஸ்வரூபாவதாரலக்ஷண ஸ்வபத்மாஸ்யாத்மஸ்வரூப[illegible]ரண விஶேஷ: -(ஸம்வாநாம்) ப்ரக்ருதி கால த்ரியஜீவாநாமாத்மத்யர்த:'

என்று இதற்கு அர்த்தம் அருளிச்செய்தார். மத்யத்திலும் 'நஸம்ஶயே' என்பதற்கு மேல், ('அத்பிஸ்ஸம்ப்ருதோ ஹிரண்யகர்ப இத்யஷ்டௌ') 'அத்பிஸ்ஸம்ப்ருத:' என்கிற அநுவாகமும், 'ஹிரண்யகர்ப' இத்யாதி எட்டு ருக்குக்களும் இங்கு அநுஸந்தேயங்கள் என்று சொல்லப்பட்டிருக் கிறது. அதில் முதலில் சொன்ன அநுவாகத்தின் முதல் வாக்யத்தில் 'அத்பிஸ்ஸம்ப்ருத:' என்கிற வாக்யாம்ஶத்தால் 'ஸஹஸ்ரவாரே' என் பதை அநுஸரித்துப் பத்மநாபரூப வ்யூஹாவதாரம் சொல்லப்பட்ட தென்பார்கள்; சிலர் ஜலஜமான ஸாளக்ராமார்ச்சை சொல்லப்படுகிற தென்று சொல்வார்கள். 'ப்ருதிவ்யை ஸம்ப்ருதே வதாமீ-ப்ருதிவ்யா ஸம்ப்ருதழ' என்று தாரு ஶிலாதி ரூபார்ச்சா ரூபமும், ரஸாத்ம ரஸஸ்ய ஸுவர்ணாதி ரத்நாதி, 'விஶ்வகர்மண: ஸமவர்ததாக்ஷ ஸவதாக்ஷ' என்கையால் ஶில்பி நிர்மித ஸுவர்ணாத்யர்ச்சா விக்ரஹ மும் சொல்லப்படுகின்றன.

'தஸ்ய த்வஷ்டா விதயத்ரூபமேதி' என்கிற மேல்வாக்யம் (விதயத் - த்வஷ்டா) பகவத் ரூபத்தை மனத்தில் நினைத்துத் தந்மயனாய் அர்ச்சாவிக்ரஹத்தை நிர்மாணம் பண்ணுகிற ஶில்பியானவன், (தஸ்ய ரூபமேதி) அந்த பகவானுடைய ஸாரூப்யத்தை யடைகிறானென்று

ஶில்பியை ப்ரஶம்ஸிக்கிறது. இதற்குமேல் 'சூர்ய ஸோமௌ ததைவச வாஸ்தோச' என்று பர வ்யூஹங்களும், அதற்குமேல் 'ப்ரஜாபதிஶ்சரதி கர்பே அந்த:' என்று அந்தர்யாமி ரூபமும், 'அஜாயமானோ பஹுதா விஜாயதே' என்று விபவாவதாரமும் சொல்லப்படுகின்றன. மேலே 'தஸ்ய தீரா: பரிஜானந்தி யோனிம்' இத்யாதிகளால் அவதார ரஹஸ்யம் தெரிந்தவர்களை ஸ்துதிக்கிறது. 'யதேவ கிஞ்ச மனுரவதத் தத் பேஷஜம்' என்கிற ஶ்ருதி வாக்யத்திலுள்ள 'மநு' ஶப்தத்திற்கு ப்ரகரணாநுகுண்யத்தாலே மந்த்ரபோதகத்வத்தை வேதபாஷ்யகாரர்கள் சொல்லியிருந்தாலும், ஸ்ம்ருத்யதிகரண ஸூத்ரபாஷ்யங்களிலும், மநுஸ்ம்ருதி வ்யாக்யாநங்களிலும் அந்த மநுஶப்தம் ஸ்வாதிக்ருதமான பரமாகச் சொல்லப்பட்டிருப்பதுபோல் 'ஸம்ஹஸ்ரவாஹ' இத்யாதி ஶ்ருதிகளுக்கு அந்யர்கள் அர்த்தாந்தரங்கள் செய்திருந்தாலும், ஸம்ப்ரதாயிகமாய் ஸ்வரஸமுமான நம்மால் சொல்லப்பட்ட இவ்வர்த்தத்தை அங்கீகரிப்பதில் ப்ரமாணஸரணியை அறிந்தவர்கட்கு பாதகம் தோன்றாது.

க்ருஷ்ண யஜுஸ் ஸம்ஹிதையில் 4-வது காண்டம் ப்ரதம ப்ரஶ்நம் 7-வது அநுவாகம் 3-வது பஞ்சாதியில் சொல்லப்பட்ட 'ஹிரண்ய கர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத்-கஸ்மை தேவாய ஹவிஷா விதேம' இத்யாதிகளான எட்டு ருக்குச்களும் விஷ்ணு ஸ்ம்ருதியில் 'ஹிரண்ய கர்ப்ப இதி ஷட் ஹவிர்நிவேதநே' என்று அர்ச்சாரூபியான பகவானுடைய ஆராதநத்தில் ஹவிர்நிவேதந மந்த்ரமாகச் சொல்லப்பட்டன. இங்கு சொல்லப்பட்ட ஹிரண்யகர்ப்பன், 'ஹிரண்ய கர்ப்போ பூகர்ப்ப:' என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்பட்ட நாராயணனே. ஜ்யோதிஶ் ஶாஸ்த்ரத்தில் ஸூர்யஸித்தாந்தத்தில்,

'அநிருத்தோ ஹரி: ஸாக்ஷாத் - ஹிரண்யகர்ப்போ
பகவானேஷ ச்சந்தஸி பட்யதே'

என்று அநிருத்தரூபியான பகவான் ஹிரண்யகர்ப்ப ஶப்தவாச்யனாகச் சொல்லப்படுகிறான். இதன் அர்த்தங்களை மேலே விஶதமாகக் காணலாம்.

இப்படி தைத்திரீய நாராயணோபநிஷத்திலுள்ள,

'ஸர்வம் நிமேஷா ஜஜ்ஞிரே வித்யுத: புருஷாதபி ।
கலா முஹூர்த்தா: காஷ்டாச்சாஹோராத்ராஶ்ச ஸர்வஶ: ॥'

என்று சொல்லப்பட்ட ஷட்வித தாத்பர்ய லிங்கங்களையும் நன்றாய்ப் பராமர்ஶிக்கும் ந்யாய வித்துக்களான மஹான்களுக்கு, இவ்வுபநிஷத் முக்யமாகப் பகவானுடைய ஐந்து ரூபங்களை ப்ரதிபாதிக்க ப்ரவ்ருத்தை என்பதில் ஸந்தேஹ முண்டாகாது.

இப்படி உபநிஷத் வேத்யங்களான பகவானுடைய ஐந்து ரூபங்களையும் அவற்றின் மாஹாத்ம்யாதிகளையும்,

'ஸவம் ஸம்ஸஷூகாரோஹோதூநாம் ஸதஹாஷயஃ |
ஸஂவஃஷாஉஷி ஸஂவஃஷாஜூரயாம்ஷெூவோக்ஷரோக்ஷாஃ |
ஸளஷஹூதொ ஜஹதூாஃ ஸஂஷஹோஹூ௱க்ஷரோக்ஷாஃ |'

இத்யாதி ஸ்ரீபாஞ்சராத்ராதி வசநங்கள் விவரிக்கின்றன. இவ்வசநங்களை அடியொற்றி உபாயங்களில் ப்ரபத்திபோலே ஸௌலப்யங்களில் அர்ச்சாவதார ஸௌலப்யமென்றூர். 'செய்ய தாமரையின்' ஈட்டுவ்யாக்யாநத்தில், யோகிகளுக்கும் துர்ஜ்ஞேயமாய் எட்டவொண்ணுத இடத்திலிருப்பதைப் பற்றி ஆவரண ஜலம்போல் பரரூபமென்றும், 'ஜா஗்ரதுஸ்வநாத்யவஸ தஂரீயஷாய யாதருகவேஷஂவாஸ்ஃ' என்கிறபடி ஜாக்ரதாஷவஷா வாந்களுக்கும் த்யாநகோசரனுய் இருப்பதைப்பற்றி க்ஷீராப்திபோல் வ்யூஹங்க ளென்றும், தத்காலத்தி லுள்ளார் மாத்ரம் அநுபவிக்கும்படி காதாசிஜகமாய் இருப்பதைப்பற்றிப் பெருக்காறுபோலே விபவங்க ளென்றும், ஹ்ருதய குஹா மஂஷனுய் இருப்பதைப்பற்றி ஊற்று ஜலம் போல் அந்தர்யாமி யென்றும், பின்னுள்ளாரும் இழக்க வொண்ணுதபடி 'ஸஷஜூஹ பூவிஷேஷாஸி ஸ்ரீஷெ ஶீதஂவ ஹுரதஂ' என்கிறபடி அவஹாஹந ஸஂலபனுய் இருப்பதைப்பற்றி ஆற்றுமடுக்கள்போல் அர்ச்சாவதார மென்றும் சில சதுரர்கள் பேசினர்கள். அர்ச்சாவதார ஸௌலப்யாதிஶயத்தை மேலே பரக்கப் பேசுகிறேம்.

இவ்வைந்து ரூபங்களில் ஆத்யந்தரூப விஷயமாக மந்தமதிகள் சொல்லும் ஆக்ஷேபங்களை எடுத்து அதற்கு ஶிஷாதும் நிரஸந ப்ரகாரங் களைக் காட்டுகிறேம். அதில் 'தஷக்ஷரெ ஸாமெ வெ்ராஸு' என்கிற ஶ்ருதி வாக்யத்தில் அக்ஷரத்வாவஸ்தாபந்ந ப்ரக்ருதி வர்த்தியாய் பரம வ்யோம ஶப்தவாச்யமான வைகுண்டத்தைச் சொல்லியிருக்க, ப்ரக்ருத்யுத்தீர்ணமாய் நித்யமாய் இருப்பதொரு வைகுண்ட முண்டென்பது ப்ராமாணிகமோ? அந்த வைகுண்டத்தில் ஸர்வவஸ்து விலக்ஷண னை பகவான் நம்மைப்போல் ஒரு திவ்யவிக்ரஹத்தைப் பரிக்ரஹித்துக் கைகளோடும் கால்களோடும் ஆயுதங்களோடும் பூஷணங் களோடும் பத்நிகளோடும் ப்ருத்யர்களோடும் கூடியிருக்கிருன் என் றும், அந்த விக்ரஹம்தான் பரரூப மென்றும், நாம் மோக்ஷத்தை யடைந்து அவ்விக்ரஹ விஶிஷ்ட பகவானுடைய கைங்கர்யங்களையே செய்யவேண்டு மென்றும் சொல்வதெல்லாம் இங்குள்ள ராஜ ப்ருத்ய நீதியை அநுஸரித்து ஊஹித்த அளவன்றிக்கே வேறுண்டோ? ஸர்வ வ்யாப்தனுய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியான பகவானுக்கு 'ஸவயஂமா ஜூஂகஜகாயவேரணம்' என்றும் 'ந தஸ்ய காயஂம் கரணம் ச விஷ்யதெ' என்றும் ஶரீரத்தை நிஷேதித்திருக்க அதற்கு விருத்தமாய் அவனுக்கு ஶரீர முண்டென்பது ந்யாய்யமோ வென்றும், அத்வைதிகளுடைய ஸஹ வாஸமும் ஆங்க்லேய பாஷாபரிவ்ருத்தமான அவர்களுடைய க்ரந்தலேஶ பரிசயமு முள்ளவர்களாய் ஜீவேஸ்வர பேதவாதாதிகளில் விஶிஷ்டாத்

வைதிகள்போல் தோன்றும் சில த்ரிஶங்கு புத்திகள் சொல்வார்கள். இவ்வாக்ஷேபாஹாஸங்க ளெல்லாம் வேதப்ராமாண்யத்தையும் ஜீவேஶ்வ ராதி தத்வங்களையும் நன்கறிந்த மஹாங்களுக்கு ஹ்ருதயங்கமங்க ளாகா. தமஆதி - லயப்ரதிபாதகங்களான

'கவ்யக்தமக்ஷரெ லீயதெ - அக்ஷரம் தமஸி லீயதெ -
தமஃ பரெ தெவ ஏகீபவதி'

இத்யாதிப்ரகரணங்களில் தமஶ்ஶாவஶ்ஶாவல ப்ரக்ருதியை அக்ஷரத்திற்கு லயஸ்தாநமாயும் காரணமாயும் சொல்லியிருப்பதாலும், ஸ்ரீ வைகுண்டம் அந்தத் தமஸ்ஸுக்கும் மேலே இருப்பதாக,

'ஆதித்யவர்ணம் தமஸஃ பரஸ்தாத்'
'ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரெ'
'தமஸஃ பரமோ தாதா ஶங்கசக்ரகதாதரஃ'

இத்யாதி ப்ரமாணங்கள் சொல்லுகையாலும், அக்ஷர ப்ரக்ருதியில் வைகுண்ட மிருப்பதாகச் சொன்னது அத்யந்தம் அஸங்கதம். 'தமக்ஷரெ பரமெ வ்யோமந்' என்கிற வாக்யத்திற்கு முன் உதாஹரித்த வாக்யங்க ளுக்கு அநுகுணமாக க்ஷரண ஶூந்யமான (நித்யமான) பரமாகாஶத் தில் '(தஸ) ப்ரஹ்ம' என்று அர்த்தம் சொல்வதே ப்ராமாணிக மாகை யால், இந்த வாக்யம் மாத்ரம் அக்ஷர ப்ரக்ருதியில் வைகுண்டத்தை ஸாதிப்பதற்குப் பர்யாப்த ப்ரமாணமாகாது. ப்ரத்யுத இவ்வாக்யம், வைகுண்டம் நித்ய மென்பதற்கு அவாதித ப்ரமாணமாகும். ப்ரமாணாந் தர மொவரனை பகவானையும் அவன் குணங்களையும் ப்ரதிபாதிக்கிற வேதத்திலேயே,

'ஐதத்வஸத்யம் பரம்ப்ரஹ்ம பராத்பரம் க்ஷயவிஜிஅடம்',
தஸ்யமெதஸ்ய பராத்பரஸ்ய ஸதிவம் யயா மேஹா
ரஜதம் வாஸோ யயா பாம்ஸ்வாவிகம் யமெந்த்ரகொபோ
யயாத்யிருயரயா புண்டரீகம் | யதாவஸ்யஃவஸ்யெத
ரத்நவர்ணம்', 'ஹரதிவதுஸ்வரமஸஃ - அபராஜிதா நா
மேவதிஃ | ஸஹஸ்ரஸ்தூணெ விமெதெ த்யௌமெகு - ஸதத
வயெதி - ஹ்ரீஶ்ச தெ லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ - ஸதா பஶ்யந்தி
ஸூரயஃ'

இத்யாதி வாக்யங்கள் ஸ்ரீவைகுண்ட லோகத்தையும், திருமாமணி மண்ட பத்தையும், ஶேஷபர்யங்கத்தையும், பகவானுடைய திவ்யமஹிஷிகளையும், கைங்கர்ய பரர்களான நித்யஸூரிகளையும், ஸ்வயம் ப்ரகாஶமான திவ்ய திருமேனியையும், மற்றுமுள்ளவைகளையும் ஸ்பஷ்டமாக ப்ரதிபாதியா நிற்க, அர்த்த நாஸ்திகர்கள்போல் பகவானையும் தத்குணங்களையும் அங்கீ கரித்து மற்றவைகளில் விவாதப்படுவது அத்யந்தம் அப்ராமாணிகமே.

...REGISTRAR OF ... 13 MAR 1942

'[illegible]'

இத்யாதி மநுஸ்ம்ருதி ராமாயண விஷ்ணுபுராணாதி வசநங்களும், பகவானுடைய பரரூப ஸித்தியில் ப்ராமாணிகர்களுக்கு ப்ரமாணதமங்களே. பரப்ரஹ்மத்துக்கே அஜ்ஞாநத்தையும், அவ்வஜ்ஞாநத்துக்கு ஆச்சாதக விக்ஷேபக ஶக்திகளையும், தந்மூலமாகப் பகவானுக்கே ப்ரபஞ்ச ப்ரமத்தையும், ஶுக்திரஜத ரஜ்ஜுஸர்பாதிகளுக்குப்போல் ராமக்ருஷ்ணாதி ஶரீரங்களுக்கும் அஜ்ஞாநப்ரயோஜ்யத்வ ஶாபல்யாதிகளையும், ஸார்வஜ்ஞ ஸர்வ ஶக்த்யாதி யுக்தமான ப்ரஹ்மத்துக்கே ஜ்ஞாநஶக்தி பலைஶ்வர்ய தயா வாத்ஸல்ய ஸௌஶீல்ய ஸௌலப்யாதி ஸர்வ கல்யாணகுண ஶூந்யத்வத்தையும் சொல்லுகிற அத்வைதிகளின் மதத்தைக்காட்டிலும், பகவானை அஜ்ஞாநாதி ஸகலதோஷ ஶூந்யனாய், ஹேய ப்ரத்யநீகனாய், ஜ்ஞாநஶக்தி பலைஶ்வர்ய வாத்ஸல்ய ஸௌஶீல்ய ஸௌலப்யாதி கல்யாணகுண பரிபூர்ணனாய், த்ரிவித பரிச்சேத ரஹிதனாய், ஶுத்த ஸத்வமய திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாய் ப்ரதிபாதிக்கிற நம் விஶிஷ்டாத்வைத மதத்தின் வைலக்ஷண்யத்தை இந்த ம்ருஷாப்ரஜ்ஞர்கள் அறிந்தார்களில்லை. 'பஹூநி மே வ்யதீதாநி' என்று ஆரம்பித்து, ஐந்து ஶ்லோகங்களால் ஸர்வஜ்ஞன் சொன்னபடி ஸாதுபரித்ராணார்த்தமாய், தர்மக்லாந்யதர்மவ்ருத்திகாலிகமாய், ஸ்வஸங்கல்ப மாத்ர ப்ரயோஜ்யமுமான ராமக்ருஷ்ணாதி திவ்யமங்கள விக்ரஹத்தை, ஸகலேதர விஸஜாதீயனாய் ஸர்வ வ்யாப்தனுமான பகவான் அங்கீகரித்து, பத்நீ புத்ர ராஜ்யாதிகளைப் பரிக்ரஹித்து ஸ்வாவதார கார்யங்களை நடத்துவதுபோல் தன்னுடைய இச்சையாலே நித்யமான ஒரு தேஶவிஶேஷத்தில் ஒரு திவ்யமங்கள விக்ரஹத்தைப் பரிக்ரஹித்து, மஹிஷீபரிஜந பரிச்சதங்களோடு நித்யஸூரி ஸேவ்யனாய் இருக்கிறானென்று முன் உதாஹரித்த அபாதிதமான ப்ரமாணங்கள் உத்கோஷித்தால், மந்தமதிகளான நாம், 'அது யுக்திக்குச் சரியானபடி இல்லை' என்று கண்மூடித்தனமாகச் சொல்வது ந்யாய்யமாகுமோ? ஶைஶவனுக்கும் ஸார்வபௌமனுக்கும் ஹஸ்த பாதாதிகளும் ஆஹார நித்ராதிகளும் துல்யமான மாத்ரத்தாலே ஶைஶவத்வம் போல் ஸார்வபௌமத்வமும் ஹேயமாகுமோ? நம்மோடு ஸாம்ய பயத்தாலே பகவானுக்குத் திவ்யமங்கள விக்ரஹமில்லையென்றால், அந்த பயத்தாலேயே பகவானுக்கு தயா வாத்ஸல்ய ஸௌஶீல்யாதி குணங்களையும் அத்வைதிகள் சொல்வதுபோல் இல்லையென்றே சொல்லவேண்டி வரும். அதையும் அங்கீகரித்தால் ஸர்வமும் மித்யையாய் முடியும்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆசார்ய மஹிமை

—

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான்]

[ஸஞ்சிகை 1: பக்கம் - 14 தொடர்ச்சி]

ஆனாலும் ஆசார்யன் லோகோபகாரத்திற்காக அதிக சாஸ்த்ரார்த்த ஜ்ஞாநங்களை ஸம்பாதிக்கிறான் என்று சொன்னது ஸம்பாவிதமாகுமோ? ‘ப்ரஹஸஞிவ’ என்று சொல்லுகிறபடியே சப்தார்த்த ஸௌந்தர்யங்களோடு உபதேச ஸாமர்த்ய மில்லாதபோது, ஸம்பூர்ணமான சாஸ்த்ர ஜ்ஞாந மிருந்தாலும் அறிவிலிகளான சிஷ்யர்களுடைய முன்புற்ற மோஹங்களொழிய வழியில்லாததினால், உலகத்திலும் தன்னுடைய தேகரக்ஷணமாத்ரத்தில் ப்ரவர்த்தித்த மனிதனுக்குத் தன்னுடைய ஆகாரத்திற்கு வேண்டிய தாந்யங்களை ஸம்பாதித்தமாத்ரத்தினால் திருப்தி ஸம்பவித்தாலும், கொள்ளமாளா வின்ப வெள்ளம் கோதில தந்திடும் வள்ளல் தன்மையுடன் விளங்கும் மஹாபுருஷனுக்கு ‘ந கஞ்சந வஸதௌ ப்ரத்யாசக்ஷீத-தத்வ்ரதம் — தஸ்மாத்யயா கயா ச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத்’ என்கிற உபநிஷத்தின்படி ஸர்வ ப்ராணிகளுக்கும் அந்நதாநம் பண்ணுவதில் ஆசையுண்டானால் அம்மஹாந்நதாநத்திற்கு அவஶ்யாபேக்ஷிதங்களாய், ஆங்காங்கு விளைந்திருக்கும் பலவித தாந்யராசிகளை யெல்லாம் அவன் ஸம்பாதித்துச் சேர்த்து வைப்பதுபோல, இத் தேசிகரும் அஜ்ஞாநாந்தகாரத்தின் நடுவில் நின்று நல்வழி யறியாது திகைத்து அலமந்திருக்கும் இவ்வுலகத்திற்கு அவ்வஜ்ஞாந விருளைத் தமது உபதேச மூலமான ஜ்ஞாநமாகிற ஸூர்யோதயத்தினால் போக்கடிப்பது பகவத்கீதையில் “ந ச தஸ்மாந்மநுஷ்யேஷு கஶ்சிந்மே ப்ரியக்ருத்தம:। பவிதா ந ச மே தஸ்மாதந்ய: ப்ரியதரோ புவி॥” என்று சொல்லுகிறபடியே ஸர்வேஶ்வரனுக்கு மிகவும் ப்ரியமான கார்யமாகையினால், ஆங்காங்கு விளங்கும் ஞானப்ரபைகளை ஆசார்யன் சேர்த்துவைக்கிறான் என்று சொல்லுகிறது. இங்கிருக்கும் ‘ஹி’ என்கிற சப்தம் இந்த லோகப்ரஸித்தியை ஸூசிப்பிக்கிறது. ஆனாலும் ‘கௌமாரமாசரேத்ப்ராஜ்ஞ:’ என்கிறபடியே பால்ய வயதிலேயே ஸகல வைதிக சாஸ்த்ர ஜ்ஞாந ஸம்பாதநத்தைப் பண்ணமுடியாதாகையினால் இவ்வாசிரியன் எப்படி லோகோபகாரம் செய்யமுடியும் என்கிற சங்கையை இங்கு வர்த்தமாந காலத்தைச் சொல்லுகிற லட் என்கிற

ப்ரத்யயம் ஸர்வ காலங்களிலும் ஞானஸம்பாதநம் பண்ணலாம் என்று சொல்லுவதால் பரிஹரித்துவிடுகிறது.

ஆக: இதனல் கீழே சொல்லப்பட்ட ஸாரபூதமான அல்பஜ்ஞாந ஸம்பாதநமும், 'ஶாஸ்த்ரஜ்ஞாநம் ப3ஹுக்லேஶம்' என்று சொன்னதும் பரோபகாரம் பண்ண ஸாமர்த்ய மில்லாதவர்கள் விஷயம் என்பதை "ப3ஹுப்4ய: ஶ்ரோதவ்யம்" "ஜ்ஞாநவ்ருத்3தா4 வயோ வ்ருத்3தா4ந் ப3ஹூந் பர்யுபாஸிதா:" என்பது முதலிய வசநங்களுக்கு விரோதம் வாராமைக்காக அங்கீகரிக்கவேண்டும்.

இப்படி "ஸ்ருதிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தா2ந்" என்கிற முதல் வாக்யத்தினல் ஆசார்யனுகிறான், "சொல்லார் தமிழொடு மூன்றும் சுருதிகள் நான்கும், எல்லையில்லா வறநெறி யாவும் தெரிந்தவன்" என்கிற படியே, இயல் இசை நாடகம் என்கிற முத்தமிழும் நான்கு வேதங்களும் மற்றும் தர்மோபதேசம் பண்ணுகிற ஸ்ம்ருதி புராணுதிகளும் அறிந்தவனுக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டதாகிறது. ஆசிரியனிடம் அன்புருகி நின்று 'ஶிஷ்யோ வத3நஹ்வ' என்று சொல்வதும் ஸம்பவிக்காததோடு "ஸர்வஜ்ஞாநோபாயா த3நயீபாந்நாஸ்விஜம் । ஶாஸ்திதாரம் ராஜாநம் ஹாய்யாஞாவிருயவாதீநீம்" என்கிறபடியே உபதேசிக்க யோக்யதையில்லாத ஆசார்யனே சிஷ்யன் விட்டுவிடவும் வேண்டிவருமே என்கிற ஸந்தேஹத்தை 'ஸ்வாசாரே ஸ்தா2பயத்யபி' என்கிற இரண்டாவது வாக்யம் பரிஹரிக்கிறது. இங்கு 'உலகத்தை' என்று சேர்த்துக்கொண்டு, சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழல் மடந்தையர்திறத்துக் காதலேமிகுத்துக் கண்டவா திரிந்து, மறந்திகழும் மனத்தராய், அறத்தையே மறந்திருக்கு மிவ்வுலகத்தை ஆசார்யன் தனது உபதேசத்தின் மஹிமையினல் பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால் ஏதமொன்று மிலாது, எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டனுய்ப் பண்ணுகிறான் என்கிறது.

ஆசார்யன் இவ்வுலகத்தில் தர்ம ஸ்தாபநத்தைத் தனது உபதேச மூலமாகச் செய்கையாலே 'ஸ்வாசாரே ஸ்தா2பயத்யபி' என்று சொல்வது உசிதமாயிருக்க 'ஸ்தா2பயத்யபி' என்று சொல்வதால், குறிப்பிட்ட காலத்துக்குள் உபதேசத்தை முடித்து க்ருதக்ருத்யராய் நினைத்திருக்கும் உபாத்யாயர்போ லன்றிக்கே, 'ந யோக்ஷ்யே' என்று தீர்மானித்துச் சொன்ன ஸம்மூட புத்தியின் வாயினலேயே 'நஷ்டோ மோஹ:' என்றும் 'ஶிஷ்யோ வத3நம் தவ' என்றும், அப்பொழுதே சொல்லும்படி செய்த ஆஶ்சர்யமான உபதேசங்களை ஆசார்யன் செய்கிறான் என்று சொல்லுகிறது. இப்படி விலக்ஷணங்களான உபதேசங்களை, ஶிஷ்யனிடம் அன்பு மிகுந்த ஸர்வஜ்ஞனுடைய உபதேசத்தில் காணலாம்.

“ஐஷெ்டாவி ெ8 ஸவா ெவதி ரஹஸ்யம் ெஹ்ரு தஃ ரஜ8ழ |
ஐஃஞ ெத ஶ ஹ்ரு தமிம் ப்ரவக்ஷ்யாமி நஸமியவெ ||
ஊய ெவகஃ கவம்—ஸ்யமிம் கீதிம் ஹிகா வாவஉவாஷ்யவி |
களெஜய ப்ரதிஜாநீஹி ந ெ8 ஹக்தஃ ப்ரணஶ்யதி |
ஊயெவகஃ கமிஹஜாராஹெஶ்ராஷ்யவி விநக்ஷ்யவி |
மிநாஹவ மிஹெகதா—ப்ரதிஜாெந வி்ரயொவி ெ8 ”

“ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யமுத்த்ருத்ய ஹுஜமுச்யதெ |
ஊர்த்வபாஹுர்விரௌம்யெஷ ந ச கஶ்சிச் ஶ்ருணொதி ெ8 |
யஹாஃயஶ்ச காமஶ்ச ஸ கிமயம் ந ெஸவ்யதெ |
ஹிக்ஷொரூர்த்வபாஹுராத்ரஸ்ய ஸத்யவாக்யம் ஹ்ரவீமி வஃ |
ெஹ ஶிஷ்யவர்காஃ ஶ்ருணுத நிர்ெதாஷாநுஷ்டாநகாஃ வரஃ ”

என்றும், “ தலையறுப்புண்டும் சாகேன் சத்தியம் காண்மின் ” என்றும், ஹிதவசநங்கள் ப்ரியவசநங்கள் ப்ரசம்ஸா வசநங்கள் பயவார்த்தைகள் சபதங்கள் முதலியவைகளோடும் உபதேசிப்பதால் சிஷ்யனுடைய மனத்தில் தர்மாநுஷ்டாநத்தில் ச்ரத்தையை உண்டுபண்ணி உபதேசிக்கையால், இது ஸ்தாபநபர்யந்தமான உபதேசமாகிறது.

இஃதிருக்க: ‘ஸ்தாபயதி’ என்று சொல்வதால் உபதேசமாத்ரத்தினுல் தர்மஸ்தாபநம்செய்வது மாத்ரமல்லாமல், இவ்வுலகத்தில் தர்மஸ்தாபநத்திற்கு அநுகூலங்களான மற்றைக் கார்யங்களையும் ஸூசிப்பிக்கிறது.

பெரும்பூதூரில் அவதரித்திருந்தவர், தீர்ந்த வடியவரைத் திருத்திப் பணிகொள்வதற்காகத் திருநாராயணபுரம் வரையில் கல்லும் முள்ளுமான கானங்களெல்லாம் திருவடிநோவ நடந்து, தீதில் நன்னெறி காட்டி பத்தியில்லாத பாவிகளையும் உய்யச் செய்ததுபோல, தேசஸஞ்சாரம் செய்து லோகோஜ்ஜீவநம் செய்கையும், ஸ்ரீஜந ப்ரயோகத்தினுல் 74 ஸிம்ஹாஸநாதிபதிகள் மூலமாகத் தர்மஸ்தாபநம் செய்வித்ததுபோல, மற்றை வித்வான்களுடைய உபதேச மூலமாகத் தர்ம ஸ்தாபநம் செய்கையும், இந்தக் காலாநுகுணமாக “ந்ருஸிம்ஹ ப்ரியா” முதலிய பத்ரிகை மூலமாக இவ்வுலகத்திற்குத் தர்மச்ரத்தையை உண்டுபண்ணுவதும், ஆங்காங்கு உபதேச ஸ்தாநங்களை ஏற்படுத்திப் பாடசாலைகள் மூலமாகத் தர்மாபிவ்ருத்தியைச் செய்வதும், தர்மக்லாநி காலங்களில் அவதரித்து ரக்ஷிக்கும்படி அவ்வீஸ்வரனையே ப்ரார்த்திப்பதும் முதலானவைகள் ‘ஸ்தாபயதி’ என்பதற்கு அர்த்தமாகலாம். இங்கிருக்கிற ‘ணிச்’ என்கிற சப்தத்தினுல் அதர்மாநுஷ்டாந நிரஸநத்தையும் செய்விக்கிறுன் என்கிறது. இங்கிருக்கிற பரஸ்மைபதமான ‘தி’ என்கிற சப்தமானது, இந்த ஆசார்யன் செய்யும் தர்மஸ்தாபநம் தனக்கு க்யாதி லாப பூஜைகளாகிற இங்குற்ற ப்ரயோஜநங்க ளன்றிக்கே, “மின்னனைய நுண்ணிடையா ருருப்பசியும் மேனகையும் அன்னவர்தம் பாடலொடு மாடலவை யாதரியேன்” என்கிற

படியே பரலோக ப்ரயோஜநமு மன்றிக்கே, க்ருபாதிசயத்தினுல் இவ்வுலகத்தைத் தர்மத்தில் நிலைநிறுத்தி வாழ்விக்கச் செய்கிறுன் என்கிறது. வர்த்தமாந காலத்தைக் குறிப்பிடுகிற லட் என்றும் ப்ரத்யயமானது இந்தலோகோபகார தர்மத்தை "கூவநெவெஹ கூமாணி ஜிஜீவிஷெசு மதம் ஸமா:" என்று நித்யகர்ம விஷயத்தில்போல யாவதாயுஷம் செய்கிறுன் என்று சொல்லுகிறது.

ஆக: 'ஆவாரெ ஸ்தாவயதி' என்கிற இரண்டாவது வாக்யத்தினுல், "ஆயாயஷுஷ ஸதஷ ஶ்ராவ்யம் ஸ்ரீதிகரம் மூஹ| ஶாஸ்ஸிதஷ வயஷ காமயொஷம் வஷெஷுவ:" என்று சொல்லப்பட்ட உபதேச ஸௌந்தர்யமும், "காரேய் கருணை யிராமானுசா விக்கட லிடத்தே யாரேயறிபவர் நின்னருளின் தன்மை" என்பதுபோன்ற க்ருபாதிசயமும் இவ்வாசார்யனுக்கு அவச்யமானது என்கிற விஷயம் சொல்லப்பட்டது.

இது நிற்க: 'ஆவாரெ ஸ்தாவயதி' என்கிற வாக்யத்திலிருக்கிற ஆசார சப்தம் முன்பு ஆசார்ய லக்ஷணமாக ஸாத்யகி க்ரந்தத்தில் 'ஆத்மவாஷியெஷு ஸமோ தெஶிக உவதெ' என்று சொல்லப்பட்ட ஸாம்ய த்ருஷ்டியை 'தஸிஹ நஷவஸ மேஹஷ ஸமேஹணழ' என்று ஸர்வேஸ்வரனுக்கு மஹத்தான திருவாராதநமாகச் சொல்லி யிருப்பதால், ஸர்வ ப்ராணிகளிடத்திலும் ஸௌஹார்த்த மூலமான ஸாத்ய த்ருஷ்டி தன்னுடைய ஆசார ஸித்தமாகையினுலே 'யாநூஸாகம் ஸாவஙிதாநி தாநிகூயொவாஸாநி நொ உதராணி' என்கிற உபநிஷத்தின்படியே இவ்வுலகத்தில் அம்மஹாகுணத்தை ஆசார்யன் உபதேசமூலமாகப் பரவச் செய்கிறுன் என்று பொருள்கொள்வது மிகவும் உசிதமாகலாம். ஆகையினுலன்றோ இந்த ஸர்வ ஸௌஹார்த்தத்தையுடைய மஹான்களுடன் ஸஹவாஸத்தினுல் துஷ்ட ஜந்துக்களும்கூட பரஸ்பர ஸௌஹார்த்தத்துடன் இருந்ததாகப் புராணங்களில் கேட்டறிகிறோம். ராமாயணத்தில் அகஸ்த்யாஶ்ரமத்தைச் சொல்லுமிடத்து, 'யயா ஶாஷா மூமஷிஜா:' என்றும், 'ஆஶாஷமூ மயஷியஷ' என்றும் நிசாகர மஹர்ஷியின் ஆஶ்ரமத்திலும், 'தமூக்ஷாஸ்ரமா வாவரா நாமாஸிம்ஹாஸரீஸுவா: | வஙிவாயெஷாவமஷுஷி யாதாரம் ஆஷாணிநொ யயா' என்றும், "ஸிம்ஹீஸுநும் விவஷி ஹஙிணஷொகக்ஸுசு ஸாஷெதந வாவரஸாம்கெ ஸுவிதி வூஷஹோ வீதமம்கொ விஹூஷ" என்றும், "தஸிநு ஶாஸதி ராஜெஷெர மூமவ்ராஜஸரீஸுவா: | கூநொ நமூவி வாநெஷு ந வாயஜெ கஷாவந||" என்று தர்மபுத்ர ராஜ்யத்திலும் "ராமெவாநுவஶ்ஷொ நாஹஷிம்ஸநு வரஸூரழ" என்று ராம ராஜ்யத்திலும், எல்லா ப்ராணிகளுக்கும் ஸ்வாபாவிக சத்ருபாவம் தொலைந்து பரஸ்பர ஸௌஹார்த்தம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இம்மஹா குணுபதேச மூலமாகவன்றோ ஆசார்யன் வானவர்தம் பிரான் பாதமாமலர்

கூடும் பக்தியில்லாத பாவிகளையும் உய்யச்செய்வதாகக் கௌதம தர்மம் 11வது-கண்டத்தில் " தாநாவாயெ௺ாவஷெஸஃ வாஶயதெ " என்றும், இப்படி லோகரக்ஷணம் பண்ணும் ஆசார்யனை எல்லாரும் உபசரித்துக் கொண்டாட வேணுமென்றும் மஹர்ஷி உபதேசித்திருப்பது. ஆனாலும், ஆசார்யன் தனது உபதேசமாத்ரத்தினால் இவ்வுலகத்தைத் தர்மாநுஷ்டாநத்தில் ஸ்தாபிக்க முடியுமோ? தாம் தர்மாநுஷ்டாநம் செய்யாதவர்களாக விருந்தால் தங்களுடைய உபதேச மொழிகளைக் கேட்குமவர்களுக்குத் தர்மாநுஷ்டாநத்தில் ச்ரத்தை யுண்டாகுமோ? ஆகையினாலன்றோ அநுஷ்டாநமில்லாதவனுடைய ஜ்ஞாநம் 'கவாஶுஷம் யயா தொயமு' என்கிறபடியே மண்டையோட்டிலிருக்கும் சுத்தஜலம்போலவும், நாயினுடைய தோலில் வைக்கப்பட்ட பசுவின்பால் போலவும் பிறருடைய உபயோகத்திற்கு உசிதமாகாது என்றும், " நாஹ்ஊஷயதி ஊவீநம் நஊஂஸஶோகா வஹமு | ஶூநஃ வாஹூவிவா நயமூஂ வாண்டிதூஂ யடூவஜிதமு " என்கிறபடியே தர்மாநுஷ்டாநமில்லாதவனுடைய ஜ்ஞாநம் நாயின்வால்போல் தனக்கும் பயனைக் கொடுக்காதென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன என்கிற சங்கையை 'ஷயஶோவரதெ யஷாக' என்கிற மூன்றுவது வாக்யம் பரிஹரிக்கிறது. இங்கு சொல்லப்படும் அநுஷ்டாநத்திற்குக் கர்மா சொல்லப்படாததினால் கீழே இருக்கிற 'ஶாஷூாயமூாநு' என்பதை இங்கு அநுஷங்கித்து, இவ்வாசார்யன் ஸர்வ தர்மங்களையும் தானும் அனுஷ்டிக்கிறான் என்கிறது. இங்கு 'ஆ' என்கிற மிகுதியான சப்தம், ஆசார்யன் தர்மங்களை அநுஷ்டிக்கும்பொழுது 'யஜதெ நாஂ யஜெஷு ஷெ' என்கிறபடியே சாஸ்த்ரம் சொன்ன முறைகளை விட்டு க்யாதி லாப பூஜாதிகளை உத்தேசித்துப் பண்ணுகையன்றிக்கே சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற க்ரமங்களோடு குறைவறச் செய்கிறான் என்கிறது. 'தெ' என்கிற ஆத்மநேபத ப்ரத்யயமானது, அர்த்த லாபத்திற்காகத் தர்மாநுஷ்டாநத்தைச் செய்யும் ருத்விக்குகள் போலன்றிக்கே, தர்மங்களை ஆத்மார்த்தமாக அநுஷ்டிப்பதைச் சொல்லுகிறது. வர்த்தமாந காலத்தைச் சொல்லுகிற லட் ப்ரத்யயமானது, ஜ்ஞாநம் பிறந்தவுடன் ஸர்வ தர்மங்களையும் விட்டுவிடவேண்டுமென்கிற மாயாவாதி மதத்தை நிராகரித்துத் தேகபாதம் வரையில் தர்மங்களை அநுஷ்டிக்கிறான் என்று சொல்லுகிறது. 'ஸ்வய'மென்கிறதினால் பிறருடைய நிர்ப்பந்தத்தினால் செய்கையன்றிக்கே தானாகவே செய்கிறான் என்கிறது. 'ஶாஷூாயமூாநாவரதெ' என்கிற சேர்க்கையினால் 'ஷவமூகஊமூாணு)வி ஷஹா' என்கிற ஸ்லோகத்தில், ஞானம் பிறந்தவன் எல்லாப் பாவங்களையும் எப்பொழுதும் செய்தாலும் குற்றமில்லை என்கிற மாயாவாதி மதத்தை நிராகரித்து, தத்வ ஜ்ஞாநம் பிறந்தாலும் சாஸ்த்ரம் விதித்த கார்யங்களையே செய்கிறான் என்று சொல்லுகிறது.

ஆக: ஆசார்ய லக்ஷணத்தைச் சொல்லுகிற மூன்று வாக்யங்களினாலும் ஆசார்யன் "சொல்லார் சுருதி மறையோதிச் சோமுச்செய்யும்

தொழிலினோர் நல்லார் மறையோர் பலர் வாழும்" என்றும், "மறையால் முத்தீயவை வளர்க்கும் மன்னுபுகழால் வண்மையால் பொறையால் மிக்க வந்தணர் வாழ்" என்றும், "மேவுநான் மறைவாணர் ஐவகை வேள்வி யாறங்கம் வல்லவர் வாழ்" என்றும், "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர் திசைமுகனை யனையவர்கள் செம்மைமிக்க" வென்றும் சொல்லுகிறபடியே ஸகல தர்மஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பூர்ணராய், லோகோபகார விஷயத்தில் "சொன்னால் விரோதமிதாகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்றும், காரேய் கருணை யிராமானுச" என்றும் சொல்லுகிறபடியே 'உபதேக்ஷ்யந்தி தே' என்று சொல்லும்படி இருக்கவேணுமென்று சொல்லப்பட்டதாகிறது. இப்படி ஸ்வாபாவிகமும் நிரூபிக்கப் பட்டது.

இனி இவ்வாசார்யனுடைய மஹிமையை நிரூபிக்கிறோம். இவ்வாசார்யனை, "ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்| மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா" "பீதக வாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேஶ்வரனுடைய அவதாரமாகச் சொல்லுகையினாலே அவன் ஸமஸ்த கல்யாணகுணங்களோடிருப்பதால், "வர்ஷாயுதாயுதைர்வாபி கோடிவக்த்ரோ ஹ்யஹோ ஸ்ரவி விஸங்க்யேதா:| ஸதே மண்ணாநா யேநசேதகம்ஸம் வதேஹவா" என்கிறபடியே அக்குணங்களை ஒருவராலும் வர்ணிக்கமுடியாதாகையினால், அவற்றுள் ப்ரதாநமான இரண்டொரு குணங்களை மட்டும் இங்கு உதாஹரிக்கிறோம்.

"காருண்யாம்புதயே" என்று வர்ணிக்கப்படும் ஸர்வேஶ்வரனுடைய காருண்யமானது ஸாதுக்களுடைய பரித்ராணத்தில் ப்ரவர்த்திக்கும்பொழுது ஸாதுக்களுக்கு விரோதிகளான துஷ்க்ருத்துக்களுடைய சிக்ஷணத்தை முன்னிட்டு ப்ரவர்த்திக்கையால் அஸாராம்சங்களுடன் கூடினபழம் போலவும், "காருண்யம் ஸாவகாஶம் த்வயி" என்றும் "க்ருதாபராத: ஶரணாகதம் ஶரணம் க்ருதாநு" என்றும் சொல்லுகிறபடியே தன்னை யாஶ்ரயித்தவர்கள்மாத்ரத்தில் உபயோகப்படுகிறதாக இருக்கும். பிராட்டியினுடைய காருண்யமோ என்றால் 'ஸீதையினிடம் க்ரூர வார்த்தைகளைச் சொல்லி அபராதப்பட்ட நீங்கள் அவனைச் சரணமடைந்து அந்த அபராதத்தைப் பரிஹரித்துக்கொள்ளுங்கள்' என்று கூப்பிட்ட த்ரிஜடையினுடைய வார்த்தையின்படி வந்து சரணமடையாது ஆகிஞ்சந்யம் தோற்றவிருந்த ராக்ஷஸிகள் விஷயத்திலும் "பவேயம் ஶரணம் ஹி வ:" என்கிறபடியே ப்ரவஹித்துச் சரணாகதியைத் தாங்கள் அநுஷ்டிக்காதபோதும் ரக்ஷித்தபடியினால் ஸர்வேஶ்வரனுடைய க்ருபையைக்காட்டிலும் மேன்மையுடையதாய்க் கொட்டையில்லாத ரஸகண்டமாகப் பழம்போலிருக்கிறது. இங்கு 'தாநு' என்கிற சப்தமானது 'க்ருதாபராத:' என்கிற அபராதிகளைச் சொல்லுகிறது.

பூமிப் பிராட்டியினுடைய காருண்யம் பிராட்டியினுடைய காருண்யத்தைக் காட்டிலும் அதிகமாய், "ந ச பூஸஜ்ஜ வ்யதிஷெயஸீதி யசு க்ஷாம் க்ஷெமெவொவிஃ ஸஹஸ்ர ஊஷேவி" என்கிறபடியால் அபராதங்கள் நிறைந்திருக்கிறவர்களிடத்திலும் அபராதமென்பதே தோன்றாததினால் பொறுமைக்கு ப்ரஸக்தியில்லாததினால் பொறுமையை நிஷேதித்திருக்கிறான் என்கையினால் இது வண்டசர்க்கரைபோலிருக்கிறது. ஆசார்யருடைய க்ருபாகுணமோ என்றால் 'வஶ: பூஸீஃதாஃ' என்றும், 'ஜஹ்ராஸா்மம் ஹாவஃ' என்றும் 'தாநாவாயெஃாவஷெஶ: வாஶயதெ' என்றும், "சொன்னால் விரோதமிதாகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்றும் சொல்லுகிறபடியே மஹாபாபிகளையும் நலிய நினைக்காத "தாவதூ யெணாஹிஹதம் யஶெதஃவிஶம் ஜமகு। வஶவம் ஶொவெஶ்ஷா ஹ தெஷா ஶெஷம் பூாஜ்ஜு: கரொதி க: ॥" என்கிறபடியே துஷ்டர்களை நலிகிறவர்களையும் வெறுத்துப் பத்தியில்லாத பாவிகளையும் ரக்ஷிக்க ப்ரவர்த்திக்கையால் இது தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் கலந்திருப்பதுபோல விளங்குகிறது.

ஆக: நாம் இப்படி ஆசார்ய மஹிமையை நிரூபித்ததின் காரணம் கீழே குறிப்பிட்ட குணங்களை எல்லாம் இக்கலியுகத்தில் ஓலைப்புறத்திலெழுதி வாசிக்கக் கேட்டிருக்கையன்றிக்கே, முன்பொரு காலத்தில் ப்ரஹ்லாத பரித்ராணார்த்தமாக ந்ருஸிம்ஹ ரூபியாக அவதரித்த ஸர்வேஶ்வரன் 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து' என்கிறபடியே இக்காலத்திலும் கீழே சொல்லப்பட்ட கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாய், ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-வது திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஸ்ரீஊெஶஃஊமஃபூதிஷாவநாவாயஃ வாஊஹம்ஸவஸிஞா ஜகாவாயஃ ஸவஃதஜ்ஜஸ்தஜ்ஜாஸயவெஷாஜாவாயஃ ஸ்ரீஹமவதூா ஊநாஜவிஜாஜநியஃாாணஸாவஃஹளரோய் விளங்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனாய் அவதரித்து, அவ்வாசார்ய முகமாய் வைதிக தர்மாபிவ்ருத்தியில் ப்ரவர்த்தித்திருப்பதால் 'திரியுகம் நீங்கி' என்கிறபடி வைதிக தர்மங்களுடைய விரோதிகள் ஒழிந்து 'பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக' வென்கிறபடியே அவ்வைதிக தர்மமாகிற கல்பக வ்ருக்ஷம் தழைத்தோங்கி வளர்ந்து புஷ்பித்துப் பற்பல பழங்களின் ஸம்ருத்தியினால் இவ்வுலகத்தை யெல்லாம் வாழ்விக்கும்படி அவ்வெம்பெருமான் அவ்வழகியசிங்கர் முகமாகத் தர்ம ஸம்ஸ்தாபநம் பண்ணிக்கொண்டு ஸர்வதா விளங்கும்படி அவனைப் பிரார்த்திக்க வேண்டுமென்பதற்காக வென்பதை இங்கு தெரிவிக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஜ்ஞாந தாநம்

[ஸ்ரீ. உப. அம். வ. நரஸிம்ஹாசார்யர்,
ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபில மடம், ஸ்ரீரங்கம்]

[ஸஞ்சிகை 1: 17-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

இந்த ஜ்ஞாந ப்ரதாந ப்ரகாரங்கள் பல உள. அவையாவன:— பூர்வாசார்யர்கள் க்ரந்தங்களை ப்ரவசநம் செய்வது; ஸித்தாந்தங்களுக்கு அநுகுணமான க்ரந்தங்களை அருளிச்செய்து எழுதுவது; க்ரந்தங்களைப் பாதுகாப்பது முதலியன. ஸ்ரீ தேசிகனுக்கு அநேக அபதாநங்கள் இருக்கச்செய்தேயும் "ச்ருதப்ரகாசிகா பூமௌ யேநாதௌ பரிரக்ஷிதா" என்று பூர்வாசார்ய க்ரந்தங்களைப் பாதுகாப்பதுபற்றி மங்களம் பாடினர்.

இப்படிக்கு இங்கு ஸ்ரீஸந்நிதியில் வித்யாதாநம் நடந்துவர, இந்தத் திவ்யாஸ்தாநத்தில் 34-வது பட்டதில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி விசிஷ்டரான ஸ்ரீமத் அத்திப்பட்டு அழகிய சிங்கர் ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களை ப்ரவசநம் செய்தருளினது மன்றியில், அதிகரண கல்பதரு முதலிய க்ரந்தங்கள் செய்தருளினபடியாலும் வித்யா ப்ரசாரத்தை மிகப் பெருமைப்படுத்தி யருளினர். இம் மஹான் செய்தருளின க்ரந்தத்தை ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தாநத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபந பரமஹம்ஸேத்யாதி விசேஷண விசிஷ்டரான ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் பாதுகாத்து முத்ரணமும் செய்வித்து ப்ரவசநமும் செய்தருளினர். இம் மஹான் ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களை அநேகாவ்ருத்தி ப்ரவசநம் செய்துவைத்தது மல்லாமல், ஸ்ரீ சததூஷணி முதலிய உத்க்ரந்தங்களையும் ப்ரவசநம் செய்தருளினர். இன்னும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ த்யாந ஸோபாநம் முதலிய க்ரந்தங்களும் செய்தருளினர்.

ஆகவே இம்மஹா தேசிகனுடைய ஜ்ஞாந ப்ரதாநம், ப்ரவசநம் ரக்ஷணம் முத்ரணம் க்ரந்தகரணம் என்றிப்புடைகளிலேயாகிறது. மேலும் இவ்வழகியசிங்கர் தமது ஸ்வாஸ்த்யத்தைச் சிறிதேனும் கருதாது, 87 திரு நக்ஷத்ரம்வரை ப்ரவசநமே ப்ரதாநமாய் நடத்தி வந்ததும், அநுஷ்டாந நிரதராயும் பகவத் பக்தி பரிதராயும் எழுந்தருளியிருந்ததும் ஜகதீ தலத்தில் ஸுப்ரஸித்தமே. அதுவுமல்லாமல் இந்த ஸ்தாநத்திற்குத் தக்க

அதிகாரியாயும், ஜ்ஞாநுஷ்டாந வைராக்ய ஸேவதியாயும் உள்ள ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதலங்க்ருத பரமஹம்ஸேத்யாதி விசிஷ்டரான ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனை ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தா பிஷேகம் செய்துவைத்தருளினர்.

ப்ரக்ருதம் ஸ்ரீ அழகிய சிங்கர் தமது பூர்வாஶ்ரமத்திலேயே "𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾𑌗𑌮𑍃𑌤𑌾𑌸𑌾𑌰𑌪𑍂𑌰𑌿𑌤𑌂 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑌮𑍍" என்கிறபடி உபந்யாஸ முகங்களாலும் ப்ரவசநங்களாலும் அம்ருதவர்ஷம் பொழிந்தது அனைவரும் அறிந்ததே. இப்படி ஜ்ஞாநப்ரதாநம் செய்வது காலத்திற்கும் நாகரிகத்திற்கும் அநுகுணமானது. இப்பொழுதும் ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளி அரிய பெரிய பூர்வாசார்ய ஸம்ப்ரதாய க்ரந்தங்களாலேயே "𑌕𑌾𑌵𑍍𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌨𑍋𑌦𑍇𑌨 𑌕𑌾𑌲𑍋 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌧𑍀𑌮𑌤𑌾𑌮𑍍" என்கிறபடி காலங்களை ஸபலமாக்கியாகிறது.

மேலும் ஸம்ப்ரதாயாநுகுண க்ரந்த நிர்மாண ப்ரவசந ரக்ஷணம் முதலியன செய்தருளியதுமன்றி, "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் மாதப் பத்ரிகா வாயிலால் பண்டிதர்களைக்கொண்டு லளித லளிதமான ஸத்விஷய வ்யாஸங்களினால் அஜ்ஞாந அந்தகாரத்தில் தடுமாறி நிற்கும் உலகத்தினரை ஜ்ஞாந விளக்கேற்றி உஜ்ஜிவிக்கும்படி செய்யத் திருவுள்ள முகந்திருக்கும் நம் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு மனத்தெழில் ஞானவிளக்கேற்றி இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஓர் கைம்மாறு மாயனும் காணகில்லான்; அதற்காக, "சாற்றி வளர்ப்பதும சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே" என்றபடி எவ்வளவு க்ருதஜ்ஞதை பாராட்டுவதும் கிஞ்சித்காரமே ஆகும் என்பது நமது முடிபு.

இம்மஹா தேசிகன் பட்டாபிஷேக காலத்தில் சில அழகிய மொழிகளை மஹாமநஸ்கதையோடு அருளியதைக் கேட்டு ஆனந்திக்காதவர் இல்லை. இம்மஹான் பரம க்ருபையால் ஜ்ஞாந தநத்தைச் சேமித்துப் பாத்ரத்தில் ப்ரதாநம் செய்யும் விஷயத்திற்காக வணக்கத்துடன் ஸமர்ப்பித்த சில ஶ்லோகங்களை இங்கு எழுதுகிறோம். அவையாவன:—

1. 𑌹𑍋 𑌹𑍋 𑌹𑌾𑌹𑍃𑌦𑌿𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌣𑍍𑌵𑌨𑍍𑌭𑌵𑌾
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌾𑌜𑍍𑌞𑌯𑌾
𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑌿𑌜𑌯𑌤𑌿
𑌪𑍍𑌰𑍌𑌢𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌕𑍍𑌤𑌾 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾 ।
𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌹𑍋𑌬𑌿𑌲𑌨𑌾𑌯𑌕𑌾𑌭𑌿𑌧𑌂
𑌦𑌿𑌵𑍍𑌯𑌪𑍀𑌠𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 𑌯𑌦𑍍𑌭𑌵𑌂
𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌶𑌿𑌕𑌶𑍇𑌖𑌰𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌣𑍋
𑌰𑌾𑌜𑌤𑌿 𑌧𑍀𑌶𑌾𑌵𑌿𑌨𑌃 ॥

2. ஜீயாசார்யாத் ததா₃ நரஹரிகருணா
ப₃ந்த₄ஸம்ப₃ந்த₄பூர்வா
விஜ்ஞானஸ்வாபதே₃ஶ்யே யதிபதிவரதோ
லப்₃த₄ஸர்வார்த₂ஶாஸ்த்ர: |
வாக்யார்த₂வ்யாக்₂யயா ஶ்ருதிஶிக₂ரகு₃ரோ
ஸ்தா₂ப்ய ஸ்வஶிஷ்யா க₃ணாதௌ₃ :
வ்யாதஸ்ரீரங்க₃காந்தாஜயதிதிலகோ
தீ₃க்ஷிதஸ்தாத் த்₃வயஸ்மை ||

3. வித்₃யாவ்ருத்₃தோ₄ வைராக்₃யஸம்பந்ந:
வாஸவ்ருத்₃தோ₄ ஹ்ருஷீகேஶாயந:
க்ருஷ்ணதோ₃ ரங்கே₃ஶநந்த₃ந:
யஸ்யாஹம் ஸ்தும் யதிராஜஸேவே ||

4. ஜிஷ்ணதி ஜிஷ்ணார்த்₂யம்
வ்யாஸதி வேதா₃ந்தநிரூபணே யோऽஸௌ |
வரதோ₃ ரங்க₃ஶாரி
ஹ்ருத்₃வோ ஶ்ரீநாநஸாஜ்ஞாவஸந்த ||

5. ஶ்ரீந்ருஸிம்ஹபத₃த்ராணம் ஸம்ஶ்ரிதாத்மனே |
ஶ்ரீரங்க₃ஶடஜித்₃யோகி₃வரேண்யாயாஸ்து மங்க₃ளம் ||

6. ஶ்ரீஹரிஶாஸ்த்ரஸ்தாந ஶ்ரீகாந்த்ய பத₃வீஜுஷா |
விஶேஷா நரஸிம்ஹேந வித்₃யாஸா ஸதா₃வர்ததே ||

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

மாசி மீ 1 உ	—	மாக ஸங்க்ரமணம். சூந்ய திதி.
,, 14 உ	—	திருக்கச்சிநம்பி திருநக்ஷத்ரம்.
,, 19 உ	—	சந்த்ரக்ரஹணம். க்ரஸ்தாஸ்தமநம். 20உ யில் செய்ய வேண்டிய ப்ரதமா திதி ஶ்ராத்தத்தை 21உ யில் செய்ய வேண்டும். 20உ பகலில் போஜனம் நிஷித்தம்.
,, 28 உ	—	நவமி தஶமி திதித்வயம்.
,, 30 உ	—	கும்ப க்ருஷ்ண த்வாதசி திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பாசுரங்கள் பகுதி

அமலனாதிபிரான் அநுபவம்

[வித்வான் அன்பில் ஸ்ரீ உப. ஏ. வி. கோபாலாசார்யர்]

தேவ ரிஷியான நாரதர் வீணாபாணி. அவருடைய வீணை அவருக்கு நித்ய ஸஹசரீ; நித்யமாக ஸஹதர்மசரீ. பகவத் குணங்களைப் பரவசமாகிப் பாடி ஆனந்திப்பதே அவருடைய காலக்ஷேபம்; அவர் தர்மம். அந்தத் தர்மத்தில் 'வல்லகீ' என்னும் அவர் வீணை ஸஹசரீ. ஆத்மயாகம் செய்யும் ப்ரஹ்மவித்துக்களுக்கு 'ஶ்ரத்தை பத்நீ' என்று சரணாகதியை விஸ்தாரமாக விவரிக்கும் வேதம் ஓதுகிறது. நாரதருடைய வீணை அவருக்குப் பத்நிபோல் ஸஹதர்மசரீ. அப்படியே நம் பாணனுக்கு அவர் யாழ் ஸஹதர்மசரீ. ஆழ்வார்கள் ரிஷிகள்; த்ரமிட வேத த்ரஷ்டாக்கள்; வேதோபப்ரஹ்மணம் செய்தவர்கள். அந்த ரிஷிகளில் நம் பாணர் நாரதரைப்போன்ற காயக தேவரிஷி. பாட்டினால் பகவானை ஸாக்ஷாத்கரிப்பவர் நாரதர். பாட்டினால் பரமாத்மாவினிடம் லயிப்பது ஸுலபம். வீணா வாதந தத்வத்தையறிந்து, ஶ்ருதி ஜாதிகளில் நிபுணராய், தாள ஞானமுடையவர் அப்ரயாஸேந எளிதில் மோக்ஷ வழியை அறிவார்—அடைவார் என்பர். நம் பாணர் இப்படி ஸுலபமாய்ப் பரமாத்மாவிடம் லயித்துப் பரவசமாகுபவர். பாட்டினால் கண்டு வாழ்பவர் நாரதர். இவரும் பாட்டினால் கண்டு வாழ்கிறவரே. பாணர் துதி பாடுபவர். 'தத் விப்ராஸோ விபந்யவ:' என்று பாடும் நித்ய ஸூரிகளைப் போல இவர் அரங்கனைப் பாடியே போந்தார். இவர் வீணாபாணி; யாழ்ப்பாணி. 'ஸ்ரீவீணாம் நிக்வணயந்' என்றபடி பாணி என்றும் திருநாமம். வாத்யத்தோடு பாடிய ஆழ்வார் இவரொருவரே. வேணுகானம் பண்ணின க்ருஷ்ணன் ஒருவரே அவதாரங்களில் வாத்யத்தோடு காயகர்; வேதாந்தத்தையும் கீதையாகப் பாடினார். மற்றைய அவதாரங்களில் பாடவில்லை. வராஹரான ஞானப்பிரான் மூக்கினால் 'குரு குரு' என்று ஶப்தித்துக் குருவானார். 'குர்குராயித கோரகோணோ வேத வேதாந்த ஶ்ருதி:'. அபிநவ தஶாவதாரமான பத்து அவதாரங்களில் இவரொருவரே கண்ணனைப்போல வாத்யம் வாசித்த காயகர். 'வீணையும் கையுமாய் ஸேவிக்கிற விவர்க்குச் சேமமுடை நாரதனாரும் ஒருவகைக்கு ஒப்பாவர்' என்று பிள்ளைலோகம் ஜீயர்.

அஷ்டாங்க யோகத்தில் ஸமாதியென்னும் லயத்தை அடைவதுண்டு. அந்த ஸமாதியில் கிடைக்கும் தர்ஶநம், தர்ஶந ஸமாநாகாரமேயொழிய முழுத் தர்ஶநமல்ல. தர்ஶநம் போன்ற மிக்க தெளிவான ஒரு ஞானம். பாட்டினால் வரும் லயமும் ப்ராயேண அப்படியே. மோக்ஷத்தில் அடைவது உபய விபூதி விஶிஷ்ட பரிபூர்ண ப்ரஹ்மத்தின் காட்சி. இவர்

அரங்கன் முன் அமலனுதிபிரான் பாடி அரங்கனருளால் அக்காட்சியைப் பெற்று முக்தரானுர். இவர் அரங்கன்முன் பாடியதற்குத் தத்க்ஷணமே பரம புருஷார்த்த முத்தியே அரங்கன் அளித்த பரிசு. 'விஶதே தத³நந்தரம்' என்றபடி பரமாத்மாவிற்குள் நுழைந்து முக்திப் பேரின்பம் பெற்ருர். இவர் முதலில் அரங்கனைப் பாட்டாலும் யோகத்தாலும் லயித்துக் கண்டது தர்ஶந ஸமாநாகாரமான தெளிந்த ஞானம். அந்தக் காட்சிக்கும், அரங்கனை நேரில் காணும் காட்சிக்கும் பேதமுண்டு. அரங்கனுடைய தர்ஶநம் இவருக்கு அரங்க னருளால் தான் கிடைத்தது என்பதை ஒருவரும் மறுக்கவொண்ணுது. இவர் வளர்ந்த குலம் அரங்கனருகில் செல்லக் கிடைக்கக்கூடிய குலமல்ல.

"யமேவைஷ வ்ருணுதே தேந லப்⁴ய:- தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்று கடவல்லியும் முண்டகமும் ஓதி வைத்தன. இந்த இரண்டு உபநிஷத்துக்களும் இதே மந்த்ரத்தை ஓதின. 'வேத புருஷன் இதை அபேக்ஷித்தான்' என்பது ஸ்ரீ வசநபூஷணம். இந்த ஶ்ருதிக்கு நம் பாணநாதன் நேர் நிதர்ஶநம். அரங்கனே இவரைக் காட்சிதர வரித்துத் தன் தருகே வருவித்துத் தன் காட்சியைப் பரிபூர்ணமாகத் தந்தான்; தன் ஸ்வரூப விவரணம் செய்தான். அவன் 'உவந்த உள்ளத்தனுய்' இவருக்கு விவரணம் செய்த திருமேனியை (தநுவை) இவர் உலகத்திற்குத் தம் பாடல்களால் விவரணம் செய்து இன்புற்று இன்பம் பயந்தார். 'கநீக்ஷப்ய ஹரிம் ஶயாநம்' என்றபடி தாம் அனுபவித்த இன்பத்தை உலகத்திற்குத் தம் பாடல்களால் ஶாஶ்வதமாகப் பயந்தார். 'காட்டவே கண்ட' என்ற நம்பிகள் பாசுரத்தில் 'பெருமாள் அருளால் வரித்து அவராகக் காட்டினதால்தான் கண்டார்' என்று 'யமேவைஷ' ஶ்ருதியின் பொருள் ஸூசிக்கப்பட்டது. 'ஆதி' என்பதற்கு 'வலுவில் தாமாகவே முதலில் அழைத்தான்' என்னும் பொருளுரைக்கப்பட்டது. தான் முந்திக்கொண்டான். 'தம்மை விஷயீகரிக்கைக்கு அடியானுன்,' 'என் பேற்றுக்கு முற்பாடானவன்' என்று பிள்ளையும் நாயனுரும் பணித்தார். 'நல்லதோர் அருள் தன்னுலே காட்டினுன் திருவரங்கம் உய்பவர்க் குய்யும் வண்ணம்' என்று பாடிய திருவரங்கம் காட்டும் அருள் இவர் வளர்ந்த குலத்திற்கு எட்டுவதல்ல. அரங்கன் அருளி பலாத்காரம் செய்யாவிடில் ஸந்நிதியில் கர்ப்ப க்ருஹத்தில் ப்ரவேஶம் இவருக்கு அக்காலத்தில் கிடைப்பது ஸாத்யமோ? மநுஷ்ய யத்நத்தில் அஸாத்ய மென்பது நிச்சயம். நந்தனுருக்குக் கிடைத்ததுபோல இதுவும் கேவலம் தைவ யத்நம். பரமாத்மா தானே தன் காட்சியைத் தருகிறு னென்பதை அரங்கன் தானே வற்புறுத்தி இவரை யழைத்துத் தந்து ஸர்வலோக ஸாக்ஷிகமாக மூதலிப்பித்தருளினுர். இந்த ஶ்ருதியில் காட்டியபடி பரம புருஷன் தம்மை ப்ரியதமனுக வரித்துத் தம் திருமேனியைக் காட்டித் தந்தா னென்பதை 'என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்' என்று ஸூசித்தார். வாரம்-வரணீய வஸ்து.

'காட்டவே கண்ட' என்று முதலடியில் கூறியது அரங்கன் திருமேனிக் காட்சி; அர்ச்சா விக்ரஹக் காட்சி. '𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌮𑍍' என்னும் ஆதியஞ் சோதியோடு அபேதமாய் அநுபவம். பர விபவ ஹார்த்த அர்ச்சா மூர்த்திகளை யொன்றாக அநுபவம்; 'பெரிய பெருமாள் திருமேனியிலே திருமலை முதலாகக் கோயில்கொண்ட அர்ச்சாவதாரங்களிலும், ராமக்ருஷ்ண வாமந வடபத்ர சயநாதிகளிலு முள்ள போக்யதையெல்லாம் சேர வநுபவித்து' என்பது முனிவாஹநபோகம். உபய விபூதி விஶிஷ்டனாக ஜகஜ்ஜந்மாதிகாரணமாக அநுபவம் உபயலிங்காநுபவம். நிர்த்தோஷ கல்யாண குணாகரத்வ ஆதிகாரணத்வ ரக்ஷகத்வாதி விஶிஷ்ட பரிபூர்ண ப்ரஹ்மமாக அமலனாதிபிரானில் அநுபவம். பாடிக்கொண்டே திருமேனியின் அநுபவம். பாட்டுக்கள் காட்சி அநுபவத்தின் பரீவாஹம். யோகமென்னும் லயத்திற்கு ஸாதகம்; விரோதியல்ல. உபய விபூதி விஶிஷ்டாநுபவத்தால் '𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃 । 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 ॥' என்றபடிக்கும் "𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿" என்றபடிக்கும், பரிபூர்ண ப்ரஹ்ம தர்ஶநம் கிடைத்துப் பாரமாய பழவினை பற்றறுந்தது. நான்காமடியில் 'பாட்டினால் கண்டு வாழும்' என்றது, முக்தி தந்தருளின உபய விபூதி விசிஷ்ட பரிபூர்ணப்ரஹ்ம தர்ஶந காட்சி. முதல் பாதத்தில் 'கண்ட' என்றது அரங்கன் திருமேனிக் காட்சி.

நம் பாணநாதர் யோகி ஸார்வபௌமர்; பாட்டினாலும் யோகத்தாலும் தர்ஶந ஸமாநாகாரமான காட்சிபோன்ற தெளிந்த அறிவாகிய ஸமாதியை அடிக்கடி ஏறுபவர்; பல்கால் யோகாரூடர். யோகாரோஹமே இவருக்குப் பொழுது போக்காயிருந்தது. கடைசியில் இவருக்குப் பெருமாள் நியமநத்தால் கிடைத்தது யோக்யாரோஹம். முனியேறினது. யோகாரூடராக நெடுகிலு மிருந்து வந்தவர் கடைசியில் யோக்யாரூடரானார். எந்த யோகிக்கும் இந்த ஏற்றமில்லை. நம்பிகளும் இதை 'முனியேறி' என்று ரஸமாக வ்யஞ்ஜநம் செய்தார். யோக மேறுவது யோகிமாத்ர ஸாதாரணம். ஆழ்வார்களெல்லாரும் யோகாரூடர்கள்; யோக மேறினவர்கள்; '𑌵𑌶𑍍𑌯𑌨𑍍 𑌯𑍋𑌗𑍀 𑌵𑌶𑍀' என்று முதல் திருவாய்மொழியின் ஸங்க்ரஹ ஶ்லோகத்திலேயே, தாத்பர்ய ரத்நாவளி சடகோப முனியை யோகி யென்றது. முநித்வம் மட்டிலும் எல்லாருக்கும் ஸாதாரணம். முனியேறின முனி இவரொருவரே.

யோகம் அஷ்டாங்கம்; எட்டு அங்கங்களுடையது. ஆனால் எட்டாவது அங்கமாகிய ஸமாதியே அங்கி. யமநியமாதிகளான அங்கங்கள் ஸாதகனுடைய ப்ரயத்நங்கள். திவ்யமங்கள விக்ரஹம் யோகத்திற்கு ஆலம்பநமாகும். ஸாலம்பநமாகச் செய்யும் பகவத் ஸ்வரூப த்யாநத்தில் திவ்யமங்கள விக்ரஹம் சுபாஶ்ரயமான ஆலம்பநம். அந்த யோகாலம்பநத்தைப் பாணயோகி எட்டு அங்கங்களாக வகுத்து, அந்த த்யாநத்தை அஷ்டாங்கமாக வகுத்தார். 'பாதகமலம், நல்லாடை,

உந்தி, உதரபந்தம், திருமார்பு, கண்டம், செவ்வாய், கண்கள்' என்பன எட்டு அங்கங்கள். முதல் எட்டுப் பாட்டுக்களிலும் இந்த எட்டு அங்கங்களின் அநுபவம். ஒவ்வொன்றிலும் விக்ரஹியின் ஸ்வரூபாநுபவமும் கலந்தது; அங்கவிஶிஷ்ட ஸ்வரூபாநுபவம்; ஸ்வரூபாநுபவத்தில் குணக்ரியாத்யநுபவமும் சேர்ந்தது. 'நல்லாடை' என்பது திருத்துடை முதலியவற்றின் ஆவரணம். 'வஸ்த்ராவ்ருதஜாநு'-ந்யாயத்தை நினைக்கவேணும். ஜங்கா, ஜாநு, ஊருகளுக்கும் நல்லாடை உபலக்ஷணம். இப்படி ஓர் விலக்ஷணமான அஷ்டாங்க த்யாநாநுபவம் பண்ணி, ஒன்பதாம் பாசுரத்தில் அகண்டமாகத் திருமேனி முழுவதையும் அனுபவிக்கிறார். இப்படி விசித்ரமான ஓர் அஷ்டாங்க த்யாந முறையைக் காட்டுகிறார். அஷ்டாங்கங்களையு மனுபவித்து, அகண்டமான திருமேனியை அனுபவித்து, உபயவிபூதி விஶிஷ்ட ப்ரஹ்மத்தை அரங்கனாகக் கண்டு, பூமவித்யையில் கூறிய பரிபூர்ண ஸுகாநுபவம் வந்து மோக்ஷம் பெற்றார்.

ஆத்மாவில் ஜாதிபேத மில்லை. ஆத்ம ஸ்வரூபம் ஜ்ஞாநைகாகாரம்; ப்ரத்யஸ்தமித பேதம். சுத்தமான ஞானமயமான இவரது ஆத்மஸ்வரூபம் அரங்கனுக்குள் ப்ரவேஶித்தது யுக்தமே. பீஷ்மர் கண்ணனைத் துதித்துக்கொண்டே அவருக்குள் ஸம்பந்நராகும்போது 'ஜ்யோதி ஜ்யோதிஷி ஸம்யுதம்' என்று வர்ணித்தபடி பீஷ்மருடைய ஆத்மஜ்யோதிஸ் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்ம ஜ்யோதிஸ்ஸுக்குள் புகுந்து அவிபக்தமாக 'இனி மீள்வ தென்ப துண்டோ' என்று ஶாஸ்வதமாகக் கலந்தது. அவருடைய திருமேனிமட்டும் நின்று விட்டது. அதற்கு அக்நிஸம்ஸ்காரம் செய்யப்பட்டது. சிசுபாலனுடைய ஆத்ம ஜ்யோதிஸ்ஸும் அப்படியே கண்ணனுக்குள் கலந்தது. 'சிசுபாலனுடைய தேஹத்திலிருந்து ஒரு தேஜோக்நி கிளம்பி, தாமரைக் கண்ணனாகிய க்ருஷ்ணனை நமஸ்கரித்து, அவருக்குள் நுழைந்த அத்புதத்தை எல்லா ராஜாக்களும் கண்டார்கள்' என்று பாரதம். 'எல்லோர் முன்னே சிசுபாலனுடைய தேஹத்திலிருந்து கிளம்பிய ஜ்யோதிஸ்ஸு வாஸுதேவனுக்குள் நுழைந்தது. த்யாநம் செய்துகொண்டே தந்மயத்வத்தை யடைந்தான்' என்று பாகவதம். அங்கும் தேஹம் கண்ணனுக்குள் நுழையவில்லை. இங்கு நம் பாணர் தம் திருமேனியோடு அரங்கனுக்குள் நுழைந்து கலந்தார். பாணனுடைய திருமேனியும் பகவதவதாரத் திருமேனிகளைப் போல அப்ராக்ருதமாகவே இருந்திருக்கவேண்டும். சுத்த ஸத்வமயமான திவ்ய திருமேனி சுத்த ஸத்வமயத் திருமேனிக்குள் ப்ரவேஶித்துக் கலந்தது. இதனால் அவர் தேஹமும் ப்ராக்ருதமல்லவென்று தெளிவாக ஏற்படுகிறது.

பாணர் ஸ்ரீவத்ஸத்தின் அம்ஶம் என்பர். ஸ்ரீவத்ஸ ரென்னும் நித்யஸூரி பாணராக அவதரித்தார்போலும். 'ஸ்ரீவத்ஸாம்ஶம் மாயகேந்த்ரம்' என்றபடி. ஸ்ரீவத்ஸத்தின் ஸ்தாநம் திருமார்பு. 'அரங்கத்

தம்மான் திருவார மார்பதன்றோ அடியேனை யாட்கொண்டதே' என்று தன் நித்யஸ்தானமான திருமார்பு விஷயத்தில் மட்டும் பாடுகிறார். ஒன்பதாம் பாட்டில் அகண்ட நீலமேனி அநுபவத்திலும் 'கோலமா மணியாரமும் முத்துத் தாமமும்' என்று தம் நித்ய ஸ்தானமாகிய திருமார்பின்கண் சென்றது. 'ஆட்கொள்வது' என்பது இவ்வாழ்வார் அநுபவத்தில் திருமேனியில் வஹிப்பது. 'அடியார்க்கு என்னை யாட்படுத்த விமலன்' என்றவிடத்திலும் தோளில் வஹிக்கப்பட்டது ஆட்பட்டதாயிற்று. திருமார்பில் வஹிக்கப்படுவது இவர் பெருமாளுக்கு ஆட்பட்டது. ஶேஷர்களான சக்ரத்தாழ்வான் பாஞ்சஜந்யாழ்வான் முதலியவர்கள் பெருமாள் திருத்தோள்கள் முதலிய அங்கங்களில் வஹிக்கப்படுகிறார்கள். ஶங்காழ்வானும் சக்ரத்தாழ்வானும் பெருமாள் தோள்களிலேறி அங்கிருந்தபடியே அவருக்கு ஆட்பட்டார்கள். அதுபோலவே இவரும் லோகஸாரங்க முனிதோளிலும், ஸ்ரீவத்ஸமாகப் பெருமாள் திருமார்பிலும் ஏறி ஆட்பட்டார். திருமார்பு தவிர மற்ற ஒரிடத்திலும் இப்படிப் பாடவில்லை. அடியாரான லோகஸாரங்க முனி விஷயத்திலும் முதற்பாட்டில் இவ்விதமாக 'ஆட்படுத்த' என்று பாடக் காண்கிறோம்.

ஸ்ரீவத்ஸத்தைப்பற்றிப் பாகவதம் தஶமஸ்கந்தம் முடிவில், ப்ருகு மஹர்ஷி பொறுமைப் பரீக்ஷை மூலமாய்ப் பரத்வ பரீக்ஷை செய்த கதை யொன்றுண்டு. அடியராகிய ப்ருகுமஹர்ஷியின் அடி யடையாள மென்ற ப்ரஸித்தியோடு ஸ்ரீவத்ஸம் என்ற மறு விளங்கவேண்டுமென்று பெருமாள் அநுக்ரஹம். ஸ்ரீவத்ஸத்தை ஸ்ரீதேவி வத்ஸன்போல—குழந்தையைப்போல—லாளநம் செய்ததாகவும், அதனால் ஸ்ரீவத்ஸம் என்று திருநாம மென்றும் ஸ்ரீ ஶங்கராசார்யர் விஷ்ணுபாதாதி கேஶாந்த ஸ்தோத்ரத்தில் பாடுகிறார். திருமருவும் திருமார்பில் ப்ருகுவின் பாதம் உதைந்தது. அந்தப் பாத சிந்ஹத்தைப் பகவான் நித்யமாக ஸ்ரீவத்ஸ வ்யாஜத்தால் வஹிக்கிறார். இது பெருமாள் தன்னை அடியார்க் காட்படுத்தும் முறையைக் காட்டின வழி. 'திருவார மார்பதன்றோ' என்று இவ்வாழ்வாரே, திரு மருவின மார்பில் ஸ்ரீவத்ஸத்திற்கும் இடங்கொடுத்த பெருந்தன்மையி லீடுபடுகிறார். லோகஸாரங்க முனியின் தோளில் எழுந்தருளுகையில், இவர் திருவடிகள் அம்முனிவர் திருமார்பில் தானே ஸ்பர்சித்திருக்கவேண்டும். பக்தரான ப்ருகு மஹர்ஷியின் பாதம் பெருமாள் திருமார்பில் ஸ்பர்சித்து ஸ்ரீவத்ஸம் போல் அபிமாநம் ஏற்பட்டதுபோல, இந்த ஸ்ரீவத்ஸாம்ஶர் பாதம் பக்தரான லோகஸாரங்க முனிவர் மார்பில் ஸ்பர்சித்தது.

இவர் கண்ணனைப் போல ரோஹிணீ நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். 'காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டுரைத்த கடிய காதற் பாண்பெருமாள்' என்றபடி, இவரும் சடகோபரைப்போல் க்ருஷ்ணத்ருஷ்ண தத்வமே வடிவெடுத் துதித்தது போலிருந்தவர். 'க்ருஷ்ணத்ருஷ்ணா தத்வமிவோதிதம்' என்று நம்மாழ்வார் விஷயத்தில் பட்டர் ஸாதித்தது இவர்க்கும் பொருந்தும். 'தீவ்ர

க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வம்' என்று 'கடிய காதல்' என்பதால் ஸூசகம். முக்தி பலம் பெற்ற கடைசிப் பாசுரத்தில் 'கொண்டல் வண்ணன் கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன்' என்று பாடுகிறார். 'அந்தகாலே ச மாமேவ ஸ்மரந் முக்த்வா கலேவரம் | ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஶய: ||'' என்பது கீதை.

இந்த ப்ரக்ருதி மண்டலத்தை விட்டுப் பரமபதம் பெறப் பகவானுடைய அர்ச்சிராதி கதி ஸாமாந்யமான மார்க்கம். அர்சிஸ்ஸூ முதலிய ஆதிவாஹிக கணங்கள் பகவந் நியமநத்தால் வஹநம் செய்பவர். சிலருக்கு வேறு வேறு வழியாக வஹநமென்று அதிகரணஸாராவளியில் 'வைத்யுதாதீநாடி' என்கிற ச்லோகத்தில் காட்டப்பட்டது. சிசுபாலாதிகளுக்கும், அயோத்தி நகர் சராசரங்களுக்கும், புண்டரீகாதிகளுக்கும், பீஷ்மாதிகளுக்கும் வெவ்வேறு விதமாக மோக்ஷமடைய வெவ்வேறு வழிகள் ஏற்பட்டன. சிலருக்கு கருடவாஹநம். இவருக்கு முநி வாஹநம்.

பாண்பெருமாள் செய்த பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்; 'சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த பாரியலும் புகழ்ப் பாண்பெருமாள்' என்றபடி இவர் பாசுரங்கள் வேதாந்த ஞானம் முழுவதையு முட்கொண்டவை. யோகாப்யாஸம் செய்து செய்து, பகவத் குணங்களைப் பரவசமாய்ப் பாடிப் பாடி இவர் தத்வஞானம் மேலும் மேலும் வளர்ந்தது. 'வேத நூற் பிராயம் நூறு' 'பாதியு முறங்கிப் போகும்.' ஐம்பது வருஷம் ஸுஷுப்தி (தூக்கம்) என்கிற லயமாக இருக்கும் என்றார். இவர் பிராயம் ஐம்பதே. இவரது பிராயமான ஐம்பது வருஷமும் இவருக்கு யோக ஸமாதி லயமாகவும் காந லயமாகவுமே சென்றது. நாரதருக்கு ஞானத்தையும் ஐஶ்வர்யத்தையும் தம்மிடம் ஸ்நேஹ பாவத்தையும கேசவன் தந்ததாக அவர் 'ததாதி ஜ்ஞாநமைஶ்வர்யம் ஸ்நேஹபாவம் ச கேஶவ:' என்று கூறினார். இத் திருப்பாணாழ்வாருடைய ஞானமும் ப்ரேமபாவமும் அளவற்றவை. இவருடைய பத்துப் பாசுரங்களிலும் ஜ்வலிக்கும் ஞான பக்திகளை யனுபவிப்போம்.

1. அமல னாதிபி ரானடி யார்க்கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
நிமல னின்மல னீதிவானவ னீண்மதிளரங்கத்தம் மான்றிருக்
கமல பாதம்வந் தென்கண்ணி னுள்ளன வொக்கின்றதே.

முதற்பாட்டு—'அமலன்' (1) தாம் தாழ்ந்த குலத்தில் வளர்ந்து பெருமாளை யணுகுவதால் பெருமாளுக்கு என்ன அவத்யம் விளையுமோவென்று மிகக் கவலை. தம் ஞானத் தெளிவினால் அக்கவலையை நிவர்த்திக்கிறார். பெருமாளுக்கு ஒன்றும் ஹேயமில்லை; எல்லாம் அவருக்கு அநுகூலமே. அவர் உபயலிங்கர்; அகிலஹேய ப்ரத்யநீகர்; அவர் ஸ்வபாவத்தாலேயே அமலர்; யாதொரு மலமும் தம்மைத் தீண்டமுடியாத ஸ்வபாவ முடையவர். அவர் எல்லார் ஹ்ருதயத்திலும் அந்தர்யாமியாக ஓர் விக்ரஹத்தோடு வஸிப்பவர். 'ந ததோ விஜுகுப்ஸதே' அவர் எவர் நெஞ்சினுள்ளும் நெருங்கி உட்புகுந்து வஸிக்கக்

கூசுவதில்லை. இந்த அற்புதமான ஸ்வபாவத்தைத் திரும்பவும் திரும்பவும் நினைந்து பேசுவதும், தம்மால் வரக்கூடிய அவத்யத்திற்குப் பயந்தே. ‘அமலன்’, ‘விமலன்’, ‘நிமலன்’, ‘நின்மலன்’, ‘அரங்கத்தமலன்’ என்று இச்சிறு க்ரந்தத்தில் ஐந்து தடவை ‘மலமற்றவன்’, ‘மலம் நெருங்கக்கூடாத ஸ்வபாவ ஶக்தியுடையவன்’ என்கிறார். ‘வளவேழுலகில்’ போல் பயந்து உடனே பரிஹரித்துக்கொள்ளுகிறார். பெருமாள் திருமுன் நிற்பதே இவருக்கு ஸங்கோசமாயிருக்கிறது. மிகவும் விரைவாகத் தம் ப்ரபந்தத்தை முடித்துவிட ஆசைப்படுகிறார். பெருமாள் நிர்ப்பந்தத்தை எத்தனை நாழிகைதான் இவர் ஸஹிப்பர்? நீண்டதொரு க்ரந்தம் செய்யத் தெரியாதவரல்லர். ஒரே தஶகம் பாடி உடனே மோக்ஷத்தைப் பெறுவதால் அகன்று போவதற்கும் போதில்லை.

(2) ‘ஆதி’ என்று காரணத்வத்தைத் தொடக்கத்திலேயே அநுஸந்திக்கப் போகிறார். சில வித்யைகளில் காரணத்வத்தையும் சேர்த்து அநுஸந்திப்பதுண்டு. அதையும் சேர்த்து அநுஸந்திப்பதில் ருசி. ‘காரணம் து த்யேய:’ என்றபடி த்யாநத்திற்கு விஷயமான பொருள் ஆதிகாரணமே. ஆகிலும் காரணத்வத்தைச் சேர்த்தும் சேர்க்காமலும் உபாஸிக்கலாம். இவர் காரணத்வத்தைச் சேர்த்து உபாஸிப்பதில் ருசியுள்ளவர். உலகத்திற்குக் காரணமாவதில், விகாரம் அசுத்தி ஸம்பந்தம் ஸாவயவத்வம் ஜடத்வம் முதலிய பல தோஷங்கள் வரக்கூடும். அந்தத் தோஷங்களொன்றும் வருவதில்லை. ப்ரஹ்மம் காரணமாக விருந்தும் தன் சுத்தியைக் கொஞ்சமேனும் விடுவதில்லை. அசுத்தியென்பதே தீண்டுவதில்லையென்று ஶோதக வாக்யங்கள் நமக்குத் தெளிவிக்கின்றன. காரணத்வத்தை ‘ஆதி’ என்று சொல்லுவதற்கு முன்பே, இவர் ‘அமலன்’ என்று அசுத்தி ப்ரஸங்கத்தை வாரணம் செய்கிறார். ஸத்யத்வம், ஞானத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் என்னும் ஐந்து குணங்கள் ஸர்வ வித்யைகளிலும் உபாஸ்யம். இந்த குணங்களின் அறிவில்லாமல் ப்ரஹ்மத்தின் அறிவே ஸித்திக்காது. ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம’, ‘அஸ்தூலம் அநணு அஹ்ரஸ்வம், அதீர்க்கம்’ ‘அரூபமஸ்பர்ஶம்’ முதலிய சோதக வாக்யங்கள் ‘அமலன்’ என்பதால் தொடக்கத்திலேயே ஸூசிக்கப்படுகிற அழகு மிக ரஸிக்கத்தக்கது. தைத்திரீயத்திலும் ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம’ என்று முதலில் ஶோதக வாக்யத்தைப் படித்து, பிறகு “தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: ஆகாஶாத்வாயு:” என்று காரண வாக்யத்தைப் படித்தது. ‘ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய’ என்ற ஸூத்ரத்தில் ஆநந்தத்வம், ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், அமலத்வம் என்று ஐந்து குணங்களை எல்லா வித்யாநிஷ்டரும் உபாஸித்தே தீரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இங்கே ‘அமலன்’ என்றது மற்ற நாலுக்கும் உபலக்ஷணம். நிர்த்தோஷத்வம் மிகவும் முக்யம். ஆகையால் அதை முதலில் பேசி மற்ற நான்கையும் உபலக்ஷண முறையாக ஸூசிக்கிறார். இங்கே ஸூசிக்கும் ஆநந்தத்வத்தை ‘என் அமுதினை’ என்று முடிவில் ஸ்பஷ்டமாகக் கூறுகிறார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

மானிடப் பேறு

[தமிழ் வித்வான் ஒரகடம் ஸ்ரீ உப. கோ. ஸுதர்சநாசார்யர்]

"மானிடர் எனும் தமிழ்மொழி மநுஷ்யர் என்னும் வடசொற்றிரி பாகும். மநுவின் மரபினராதலால் அவர் மானிடர் எனப்பட்டனர்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினு மரிதரிதுகாண்
இப்பிறவிதப்பினு லெப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ வறிகிலேன்"

என மானிடப் பிறவியின் அருமையைத் தாயுமான வடிகளும் பேசிப் போந்தனர். பெறற்கரிய பிறவி பெற்ற மானிடரின் கடமை யாது? அன்னோர் எதற்காகப் பிறவி பெற்றனர்? முடிப்ப முடித்துப் பின் பூசுவ பூசி உடுப்ப உடுத்து உண்ப உண்ணவோ? அன்றேல் கடவுள் பத்தி அடியார் பத்தி முதலியன செய்து வீட்டின்பம் பெறவோ? இவற்றைச் சிறிது ஆராய்வாம்.

மனிதற்கும் ஏனை விலங்குகட்கும் பேதம் என்னை யெனின்: இவற்குப் பகுத்தறி வென்னும் அரும் பெறற் செல்வம் பெற்றிருத்தலே. அத்தகைய பகுத்தறிவு கொண்ட மானிடர் அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் அடைதல் வேண்டும். இந் நால்வகைப் பொருள்களுள் பின்னையதாகிய வீட்டின்பத்தைப் பற்றி, "வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின், அது துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவ தல்லது இலக்கண வகையாற் கூறப்படாதது" எனப் பரிமேலழகர் கூறிப் போந்தனர்.

" .... ஓர்
தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியு மூழிலையும்
என்னு மிவையே நுகர்ந் துடலம் தாம் வருந்தித்
துன்னு மிலைக் குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன்
மன்னு மழல் நுகர்ந்தும் வண்டடத்தி னுட்கிடந்தும்
இன்னதோர் தன்மையரா யீங்குடலம் விட்டெழுந்து
....
மன்னுங் கடுங்கதிரோன் மண்டலத்தி னன்னடுவுள்
அன்னதோ ரில்லியி னூடுபோய் வீடென்னும் தொன்னெறிக் கண்"

செல்லுதல் என்பதே ஐயனருட்கலியன் வீட்டு நெறியைக் காட்டிய தொல்வழி. அதுவே நல்வழியுமாம்.

இனி அறமாவது: மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அவ்வறம் ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம் என மூவகைப்படும். இவற்றை நந்தமிழர் ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்பர். நால்வகை வருணத்தாரும் தத்தமக்கென வகுக்கப்பட்டுள்ள ஆச்

சிரமங்களினின்றும் வழுவாதிருத்தல் ஒழுக்கமென்றும், ஒரு பொருளில் யான் எனது எனும் அகங்கார மமகாரங்களினால் உண்டாகும் மனோ விகாரம் வழக்கென்றும், ஒழுக்க நெறியினின்றும் தவறினோரைத் தக்க நெறியில் நிறுத்துவதற்காகச் செய்யும் சிக்ஷை தண்ட மென்றும் கூறப்படும்.

இம்மை மறுமை எனும் இரண்டையும் தருதற்கு ஏற்றது பொருள். அது அறத்தையும் இன்பத்தையும் தருதல் பற்றி இடையே வைக்கப்பட்டது. இது பற்றியே, "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையும் மெய்தும்" எனவும், "பொருளா லிரண்டு பெறலாகும்" எனவும் ஆன்றோர் வாக்குக்கள் எழுந்தன. செல்வம் இல்லை யெனின் ஒருவன் இவ்வுலகின்கண் ஒன்றும் செய்ய இயலாது. தானிய முதலிய பொருளிலா வீடு இடுகாடொக்கும்; ஒருவன் கல்வி முதலிய குணச்சிறப்புற்றோ னாயினும், அவன் மனிதர் எண்ணிக்கையில் உறான். ஆகவே உலகம் நடாத்தற்கு இன்றியமையாதது கருந்தனம்.

"அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு"

எனும் குறட்பா இதனை வலியுறுத்தும். விண்ணுலகில் ஶக்ரன் (இந்திரன்) சிறப் பெய்தியதற்கும், மண்ணுலகில் அரசர் முதலானோர் பெருமை எய்தியதற்கும் செல்வமே காரணமாகும்.

இனி: செல்வம் காரணமாக உண்டாவதும், செல்வம் தோன்றும் போது உடன் தோன்றுவதும், அது அழிந்தபோது உடன் அழிவதும் இன்பமாகலின், அதன் விரிவு அவசியமின்று. அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் நந்தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் பின்வரும் செய்யுளில் அழகு பெற அமைத்திருத்தல் நோக்கத்தக்கது. அச்செய்யுள் வருமாறு:—

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத் தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

இச்செய்யுளால் பெறப்பட்டதி யாதெனின்: உலகப் பற்றை அறவே ஒழித்து, ஐம்புல னடக்கிப் பரனை வழிபட்டுச் சேரும் இடமே வீடென்பது. இதனை "அற்றது பற்றெனி லுற்றது வீடு" என்று ஆதி குலபதியாகிய ஆழ்வார் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார். வீட்டு நெறியைப் பேணுதற்குச் செய்யும் அறமே துறவறமாகும். துறவறமென்னும் சொற்றொடர்க்குப் பரிமேலழகர், "புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாய பற்றினை அவற்றின் நிலையாமையை நோக்கி விடுதல்" என வரைந்துள்ளார். வீடு எய்த முயல்வோர் காவலிற் புலனை வைத்துக் கலிதன்னைக் கடக்கவேண்டும். இந்திரியக் குஞ்சரத்தை ஞான விருங் கயிற்றால் சிந்தனைத் தூண் சேர்த்துப் பந்தித்தல் வேண்டும். இவ்வாறு செய்வோரே அந்தமில் பேரின்

பத்தை அடைவர். அங்ஙனம் செய்யாதார் வெம்மைகூர் நரகினைப் பெற்றுப் பிறவிகள் தோறும் எய்த்திளைப்பர். ஆதலின் உலகப்பற்று விடற்கு, 'பற்றற்றான் பற்றினைப் பற்றுக' என்று கூறிப் போந்தார் ஆசிரியர் திருவள்ளுவனார். முற்பிறப்புக்களில் எத்துணைப் பாவம் செய்திருப்பினும், விளக்குப் புக இருள் மாய்வதுபோலும் தீயினில் தூசுபோலும் அவர் தவத்தின் முன் பாவம் நில்லாது. நல்லவை நாடி இனிய செயின் அல்லவை தேய அறம் பெருகும். இந்நல்வழியைக் கடைப்பிடிக்கச் சத்தியமே மூலகாரணம். சத்தியமே பரப்பிரம்மம் என்பது நூற்றுணிபு. சத்திய மென்பது தென்மொழியில் வாய்மை எனப்படும். அத்தன் அருளைப் பெறவேண்டின் அகத்தூய்மை வேண்டும். வாய்மையால் அகம் தூய்மையாம். அன்பின் வழியே சத்தியம். அது அன்பின் பரிபூர்ண தசை. இச்சத்தியத்தைக் கடைப்பிடிக்க முயல்வோர் மாணுகந்த ஆசிரியரிடம் ஞான நூல்களை ஐயந் திரிபறக் கற்று, பாவத்தை ஒழித்து, புண்ணியத்தைப் புல்லி, உடலை நீத்தல் நெறியாகும். இல்லறத்தினர்மட்டும் அந்நெறியைக் கைப்பற்றுதல் வேண்டாவோ வெனின், அவர்க்கும் அது அவசியமாக வேண்டுவதே.

இல்லற மென்பது இம்மை மறுமை யின்பங்களை அனுபவித்தற்குரிய நெறியில் நின்று, அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படும் தருமம். இல்லறத்தான், நல்லாசிரியனிடத்திருந்து அறநூல்களைக் கற்றுப் பிரமசரிய ஒழுக்கத்தானுக்கும் வானப்பிரஸ்த ஒழுக்கத்தானுக்கும், முற்றத் துறந்த யோக ஒழுக்கத்தானுக்கும் துணை செய்தல் வேண்டும். இஃதே இல்வாழ்வானது கடமையாம். இன்னும், இன்சொல்லே விளைநிலமாக, ஈதலே வித்தாக, வன்சொற் களைகட்டு, வாய்மை எருவட்டி, அன்பு நீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன ஓர் பைங்கூழ் சிறுகாலைச் செய்தல் வேண்டும். சிற்றினம் சேராது, பெரியாரைத் துணைக்கொண்டு, நற்காரியங்களை இயற்றி, இந்திரிய நிக்கிரகம் செய்து இல்வாழ்க்கையை அவன் செவ்வனே நடத்தல் வேண்டும்.

> " மருவிய காதல் மனையாளும் தானும்
> இருவராய்ப் பூண் டேர்ப்பினல்லால்—ஒருவரால்
> இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
> செல்லாது தெற்றிற்று நின்று."

என்பவாகலின், திண் கற்பு வாய்ந்த இல்லக் கிழத்தியுடன் ஒற்றுமையாக வாழ்வு நடாத்தல் அவற்கு இன்றியமையாதது.

ஆகவே: மானிடர் யாவரும் தத்தமக்குரிய ஆச்சிர தருமத்தைச் செய்து, ஆசிரியன் அருள் பெற்று, அவன் மூலம் இறைவனை வழிபட முயல்வதே மானிடப் பிறவியின் பேறு."

> " கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான்
> பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்—சீர் கலந்த
> சொன்னினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை
> யென்னினைந்து போக்குவரிப் போது."

ஸ்ரீ:

அபிநந்தநப் பத்ரிகைகள்

21/10/60

---

(1)

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. பாஷ்யம் ஐயங்கார், ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ், மதராஸ்]

ஸ்ரீ அஹோபில ஸ்ரீஸந்நிதியிலிருந்து "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பெயருடன் ஒரு வைதிக மாதப் பத்திரிகை வெளியிட நிச்சயிக்கப்பட்டிருப்பதைக் கிருபையுடன் அடியேனுக் கனுப்பப்பட்டிருக்கும் அப்பத்திரிகையின் முதல் ஸஞ்சிகை வாயிலாக வறிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறேன்.

இப்பத்திரிகை மட்டுமே யல்லாமல் இன்னமும் நம்முடைய அநர்க்கமான ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஞானத்தை வெளிப்படுத்தவும் பரவச் செய்யவும் பாடசாலைகள், வித்வத் ஸபைகள், ப்ரவசனங்கள் முதலான ஏற்பாடுகளும் செய்ய ஸ்ரீ ஸ்வாமி உத்தேசித் திருப்பதாயும் தெரிகிறது. பூர்வாஶ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமியின் பரிசய பாக்யம் கிடைத்தவர்களில் அடியேனும் ஒருவனானதால், மேல் சொன்ன கட்டளைகள் கட்டாயம் நடைபெறு மென்று நிச்சயித்துக் குதூஹலிக்கிறேன்.

லோக ஹிதார்த்தமாய் "ராமாநுஜ திவ்யாக்ஞா—திகந்த வ்யாபிநீ பூயாத்" என்று அநுதிநமும் நாம் செய்யும் மங்களாஶாஸனத்தை நிறை பெறச் செய்வது விசேஷ பகவத் கடாக்ஷ பாத்திரர்களான மடாதிபர்களுடையவும் மற்றும் ஆசார்ய புருஷர்களுடையவும் பாரமென்று அடியேனுக்கு வெகு காலத்திய நினைவு. இப்பார நிர்வஹணத்தில் இம்மடத்து ஸ்ரீ ஸ்வாமிகள் இப்போது கம்பீரமாய் முன்னடி வைத்தது விஶேஷஞ்ஜ் ரனைவராலும் போற்றத் தக்கதாகும்.

ஏனைய மடாதிபர்களும் ஆசார்ய புருஷர்களும் அவரவர்களுக் கிசைந்தபடி இவ்வழியைப் பின்பற்றுவார்களாகில் நம்முடைய ஶர்ஶநம் யதாபுரம் அகிலதம: கர்ஶநமாய் விளங்கு மென்பதில் ஸந்தேகமில்லை.

இப்பத்திரிகைக்கு ஜ்ஞாநாநுஷ்டான பரிபூர்ணரும் ருஷிதுல்யருமான ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்ய ஸ்வாமி ஸம்பாதக ஸ்தாநத்தை வஹித்ததும் ஸ்ரீ வைஷ்ணவகுல பாக்கியம்.

---

(2)

[வைத்தியரத்னம் பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷணம் ஆயுர்வேதாசார்யர் எழுதியது.]

க. த்ருஷ்ட்வா விநஷ்ட ஸம்ப்ரதாயவைவிஶிஷ்ட வித்³-
வித்³வாஸ[illegible]ரக்ஷித நயே ஸபயே ஸம்ப்ரதாயிணாம் ।
[illegible] தஶிஷ்யவர்ய
ஸ்வாநோகிதம் ஹரதி யா ந்ருஸிம்ஹப்ரியா ச ॥

உ. ஸோகா வெஷிகயடுமநுவிரஹா ஒெநஸுஜண்யஸஹதமிஷிக-
ஸூாஹா ஒதூாஈஊரா ஜநவஈவபூயூஂஸிஸொ நாஹூிகா: ।
ஞூ வாரூஜநாஜுதஸ்ய ஒஹதாம் ஹெதொஜுமஜெஜுயஸாம்
யடுஷ்யாஈய ஸநாதநஸ்ய வ ஸதாம் யூஂஸாய ஸொஈய்ஜுதெ ॥

௩. வொஸ்ரயெடு வெஜூரஜூாம் விஷயவிரஹிதெஷுஜ்யாஸ்யூஷநஸ்யூா
ஈஷேஷேவாதிவெஷம் நந ஸகமவகஸ்யாவரிஷாம் ஈநஹாஷூ
நாஹூிகூஸ்யாவி வாஷெ ஙிவணஒதிகுதாம் விஷநாஒஒநஜி
ஜுயூஂஸாயொதூயஸூா ஜமதிஜஹஈநஜூாஸயுஷா மவிஷூா:॥

ச. ஒஷெவீ வாமவி ஒஷெவஈஸூவஸிதாஜிஸூஈஜுதெஜநாஈஜதம்
ஸாஜும் வெஜநாயஸம்ஒதஒஹொ ஒஹஷஜுஒஜும் யஸா ।
யடுாஷேஷ ஷ்யதிவொஜிதா: ஸஹவநீஸொஜுஸூஹீநா: வரம்
விஜூா வீதவமா: ஜுயாஈய் நஜஹஸஜுஷூஜும் ஹாகஷதா: ॥

ரு. கஒெ காஒெயஷொஷஜுஸஜஸகமாநஷூமெ ஜுஜாநாம்
ஜாவாநீயெஜு ஜாதம் ஸவஜி ஹயஒஹொ ஜாஜுநீயெஜுஸம்ஒெஸ: ।
ஸாயமிநாம் நாஸிஹூாநூஹஸஜஹவம் ஒெநவ ஹஜும் தநீஷெ
ஜுாதம் வாவஜுயெஜூநஹஸிகணாம் வதிகா தஜுயா ந: ॥

சு. ஷூிதெ ஒநவி ஸாம்வஜுதம் ஒநஜகெஸஷிண்யாதஜா
யூராதிமணவஹுஸொஜுஹூ தஒாயஸெஜாஹூஸொ: ।
தஈஜூமததஜுயாஸஸஸெநஜுவாதெ ஹஜ-
ஜுகணஞூதகணெ கூதஜிதொ ஹியா ஈஜூநாக ॥

எ. ஸ்ரீநூஸிஹஜுயா கஷ்ய ஒெவஷூவஷ்ய ந ஹி விஜுயா ।
வொஷயெஈஜு ஈயாஸாஒஜுஹூஸொ: ஸாஜுஸஒெஸூ ந: ॥

அ. ஜயதுஹொஸிமாயஸ: ஸ்ரீஜூஸஜிஜூா: ।
யஜுநகஒெஜூ வொஷெதி ஸ்ரீநூஸிம்ஹஜுயாதூநா ॥

கூ. ஸ்ரீவீஸாவவாஜுஷ்ய ஒஜுாகூாஹிஜநஷ்ய ய: ।
ஸதஷேந ஈஸொஷூாசீநாஜூா ஹஜுா கூதி: கூதா ॥

க0. குஸாஹூஹெ ஜுவவநம் ஸஜடுாணாஒதநுதஜு ।
நூஹஸிஜுயயா வாஹூஈஹொஸிமஒாயிஒெ: ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

40-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரின் 19-வது வார்ஷிக மஹோத்ஸவம்.

இந்த மஹாராதந மஹோத்ஸவம் பன்னுருட்டி என்னும் ஸ்தலத்தில் வழக்கம் போல் மிகவும் அழகாய்க் கொண்டாடப்பட்டது. 12—1—1942 அன்று இவ்வழகிய சிங்கருடையவும், 30-வது பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரான ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வேதாந்த யதீந்த்ர மஹா தேசிகனுடையவும் வார்ஷிக திருநக்ஷத்திர மஹோத்ஸம், ஸேவை சாற்று முறைகளுடன் அநுஷ்டிக்கப்பட்டது. 40-வது பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுருவப் படத்திற்கு வழக்கம் போல் இரவு வீதி உத்ஸவம் நடத்தப்பட்டது. மறுநாள் ஸேவை க்ரந்தங்கள் உபக்ரமிக்கப்பட்டு, 14௳ திருவத்யயனம் நடந்து, ஸ்வாமிகளுக்கு ஆழ்வார் ப்ரஸாதம் அளிக்கப்பட்டு, மஹாராதன உத்ஸவம் பூர்த்தியாயிற்று. பக்கங்களிலுள்ள அக்ரஹாரங்களிலிருந்து அநேக ஸ்ரீ வைஷ்ணர்கள் ஸேவை ஸாதித்தார்கள். ஸ்ரீ லஷ்மீந்ருஸிம்ஹன், ஸ்ரீ ரங்கநாதன், ஸ்ரீ ஆராவமுதாழ்வான், ஸ்ரீ பரிமள ரங்கநாதன், ஸ்ரீ தேவநாதன், ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் முதலிய எம்பெருமான்களின் ப்ரஸாதங்களை ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் பற்றியருளினர். இந்த உத்ஸவம் ஆஸ்திகர்களால் கொடுக்கப்படும் த்ரவ்யத்தைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்ற தென்றும், மிகவும் அழகான ரீதியில் நடத்தப் பட்டு வருகின்ற தென்றும் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு நன்கு தெரிந்த விஷயம். ஸ்ரீ அழகிய சிங்கரும் அத்யந்தம் க்ருபையுடன் இந்த மஹாராதன கைங்கர்ய மஹோத்ஸவத்திற்குக் கொஞ்சம் த்ரவிய ஸஹாயம் செய்தருளினதற்கு எல்லாரும் க்ருதஜ்ஞதையுடன் கூடினவர்களாக இருக்கிறார்கள்.

காரகுருச்சி, வங்கீபுரம், ஸ்ரீ ஸௌந்தரராஜாசார்யன்.

(2)

மாலோல வித்வத் ஸபா

ஏற்கெனவே முதல் ஸஞ்சிகையில் குறிப்பிட்டபடியே நாளது வ்ருஷஸ்ரீ மார்கழிமீ 28௳ முதல் ஸ்ரீரங்கம் ஸ்ரீ தசாவதார ஸந்நிதியிலிருக்கும் ஸ்ரீ அஹோபில மடம் 42-வது திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக இத்யாதி ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் "மாலோல ஸபா" என்கிற வித்வான்களுடைய ஸபை நடத்தப் பெற்றது. ஒவ்வொரு தினமும் மாலை 7 மணிக்கு உபந்யாஸங்களும் ஷ அழகியசிங்கருடைய அக்ராஸநத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுத் தைமீ 4௳ வரை நடத்தப்பட்டது.

அக்காலத்தில் பற்பல இடங்களிலிருந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள அநேக பண்டிதர்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொரு தினத்திலும் மத்யானம் 2 மணிக்கு மேல் பூர்வபக்ஷ ஸித்தாந்தரூபமாக ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலான க்ரந்தங்களில் வாக்யார்த்தங்கள் நடைபெற்றன. ஏழாவது தினமான தைமீ 4௳யில் பண்டிதர்களுடைய ஜ்ஞாந தாரதம்யத்தை அநுஸரித்து ஸ்ரீ அழகிய சிங்கரால் உத்தம கக்ஷியில் தேறினவர்களுக்கு ரூபாய் இருபதும் ரூபாய் ஐந்து பொறுமான அதிகரண ஸாராவளி க்ரந்தம் ஒன்றும் ஸம்மாநமாகக் கொடுக்கப் பட்டன. மத்திம கக்ஷியில் தேறினவர்களுக்கு ரூபாய் பதினைந்தும் ஒரு அதிகரண

ஸாராவளி க்ரந்தமும் கொடுக்கப்பட்டன. வெளியூர்களிலிருந்து வந்த பண்டிதர்களுக்கு ரயில்சார்ஜ் முதலான செலவுகளும் கொடுக்கப்பட்டன. சற்றேறக்குறைய ரூபாய் ஆயிரம் வரையில் ஸம்பாவனை ஸம்பந்தமாகச் செலவழிக்கப்பட்டது. ஏழுநாளும் பண்டிதர்களுக்குத் ததியாராதநம் முதலிய உபசாரங்களும் குறைவின்றி நடத்தப்பட்டன.

ஸபைக்கு எழுந்தருளியிருந்த வித்வான்களின் திருநாமங்கள்.

ஸ்ரீ. உப. வே. வித்வான் புள்ளம் பூதங்குடி ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி
,, ,, அம். வ. நரஸிம்மாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீகார்யம்
,, ,, பிர்மதேசம் ராமாநுஜாசாரியர் ஸ்வாமி
,, ,, குறிச்சி ஸ்ரீநிவாஸ ரங்காசாரியர் ஸ்வாமி
,, ,, புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தான வித்வான்
,, ,, கோஷ்டிபுரம் ஸ்ரீராமதேசிகாசாரியர் ஸ்வாமி
,, ,, திருக்குடந்தை அக்னிஹோத்ரம் தாதாசாரியர் ஸ்வாமி
,, ,, திருக்குடந்தை ஸ்ரீநிவாஸ பாட்டராசாரியர் ஸ்வாமி
,, ,, திருப்பதி திருவரங்கம் D. T. தாதாசாரியார் ஸ்வாமி, M.O.L.
,, ,, மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசாரியர் ஸ்வாமி, (திருவையாறு ஸமஸ்கிருத காலேஜ்)
,, ,, தில்லையம்பூர் வேங்கடாசாரியர் ஸ்வாமி
,, ,, தோட்டாலம் வேணுகோபாலாசாரியர் ஸ்வாமி, மதருஸ்.
,, ,, A. V. கோபாலாசாரியர் ஸ்வாமி, அட்வகேட், திருச்சி.
,, ,, முக்கூர் ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி
,, ,, இஞ்சிமேடு ராகவாசாரியர் ஸ்வாமி, திருப்பதி ஸமஸ்கிருத காலேஜ்.
,, ,, முக்கூர் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி
,, ,, நெடுந்தெரு பத்மநாபாசாரியர் ஸ்வாமி
,, ,, வில்லிவலம் நாராயணசாரியர் ஸ்வாமி
,, ,, திருக்கோட்டியூர் தாமோதராசாரியர் ஸ்வாமி
,, ,, மோஹனூர் ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமி
,, ,, ,, கோபாலாசாரியர் ஸ்வாமி
,, ,, மைசூர் திருமலாசாரியர் ஸ்வாமி
,, ,, ,, சேஷாசாரியர் ஸ்வாமி
,, ,, தையாறு ஜோ. ரங்காசாரியர் ஸ்வாமி
,, ,, புரிசை வரத தேசிகாசாரியர் ஸ்வாமி
,, ,, குரிச்சி ராமபத்ராசாரியர் ஸ்வாமி
,, ,, அத்தி ஸாரநாதாசாரியர் ஸ்வாமி
,, ,, பாதூர் கோபாலாசாரியர் ஸ்வாமி
,, ,, மேல்பாக்கம் நரஸிம்மாசாரியர் ஸ்வாமி
,, ,, அத்தி கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி
,, ,, வலையபுத்தூர் ஸம்பத் குமாராசாரியர் ஸ்வாமி
,, ,, திருப்பதி வாஸுதேவாசாரியர் ஸ்வாமி.
,, ,, தையாறு ஸ்ரீநிவாஸசாரியர் ஸ்வாமி
,, ,, இஞ்சிமேடு ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

யோ(அ)ந்த: ப்ரவிஸ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஸக்திதர: ஸ்வதாம்நா |
அந்யாம்ஸ்ச ஹஸ்தசரணஸ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ||

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு லோகோஜ்ஜீவநார்த்தம் யாத்ரையாக ப்ரஸ் தாநித்துவிட்டார் என்று கேட்க நாம் அதி மாத்ரம் ஆநந்திக்கிறோம். அநேக வர்ஷ காலமாக நாம் செய்துகொண்டு வந்த மநோ ரதம் இப்பொழுது நிறைவேறிவிட்டது. இனி, முடவராகவும் தத்ப்ராயர்களாகவும் இருக்கும் ஜநங்க ளெல்லாருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸேவை வடித்து, அது வழியாக ஆத்மோஜ்ஜீவநம் ஏற்படும் பாக்யம் கிட்டிவிட்டதென்று சொல்லலாம். பஹுகாலமாக எவ்வித ஸ்ரேயஸ்ஸுக்கும் பாத்ரமாகாமல் உழன்றுகொண்டிருந்த சேதநா சேதநங்கள் அடங்கிய ஜகத் முழுவதும், ஒரு காலம் வரவே, த்ரி விக்ரம ரூபியான பகவானுடைய பாதஸ்பர்ஸம் பெற்று மஹர்ஷி களுக்கும் துர்லபமாயிருக்கும் ஸ்ரேயஸ்ஸை அடைந்ததன்றோ? எந்தக் காலத்தில் யாருக்கு என்ன பாக்யம் வருமென்று யாரால் சொல்லக் கூடும்?

இந்த யாத்ரை பெரியதொரு உத்ஸவம். பகவான் த்ரி விக்ரமாவதா ரோத்ஸவத்தைக் கண்டருளினபொழுது, ஸ்ருதி, "விசக்ரமாணஸ்த்ரேதோருகாய:" இத்யாதியான கம்பீர நிர்ஹ்ராதி களான ஸப்தங்களால் த்ரிவிக்ரமனுடைய யஸஸ்ஸை உத் கோஷித்து முன் நின்றதென்பதை "தஸ்மௌ ரங்கேந்த்ர வ்யதநுத தவ ஜயகோஷவதோ விஜிக்ஷு வேத:" என்று ஸ்ரீ பட்டர் அநுக்ர ஹித்திருக்கிறார். இந்த யாத்ரோத்ஸவத்தையும் அப்படிப்பட்ட உத்ஸவமென்று சொல்லப் பொருந்தும். ஸ்ரீ பட்டருடைய "ரங்கேந்த்ர" என்னும் ஸம்புத்தி இவ்விடத்தில் ஸாக்ஷாத்தாகவே

அந்வயிக்கின்றது. "வாகெநாsயீடு கவோஸீ:" என்பது போல இவ்விடத்திலும் பூர்வம் ஒரு தஸை ஸ்வீகரிக்கப்பட்டு, பஶ்சாத் லோகவிக்ரம க்ஷமமான தஶாந்தராவிர்ப்பாவம் ஏற்பட்டிருக்கின்றது. இவ்விதம் உத்ஸவப் பொருத்தம் உபபந்நமாகிறபடியால், ஶ்ருதியானது யஶஸ்ஸை உத்கோஷித்ததுபோல 'ந்ருஸிம்ஹ ப்ரியை'யும் அதை ஒருவாறு உத்கோஷிப்பது ப்ராப்தமே.

> ஜயதி ஜயதி தெவொ நீயதெ யஸ்ய கீத்தி:
> ஶ்ருதிஶிரஸிஶிரொவெஷ்ஷெசூவநிஹ்யாஷிஶஸெவை: ।
> ஜயதி ஜயதி யொகீ தஸ்ய வாசஉள ஶ்ருயந்ஹ:
> ஶரணகொவமதாஸஷ்ஷாயதெ ரஜநாயஃ ॥

* * * *

ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள "ஹம்ஸ ஸந்தேஶம்" என்னும் க்ரந்தத்தை, வைத்யரத்நம் பண்டித ஸ்ரீ. உப. மே. துரை ஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி தமிழில் மொழிபெயர்ப்பித்து, ஶ்லோகங்களின் அர்த்தத்தைத் தெளிவாக விளக்கக்கூடிய குறிப்புக்களுடனும் மேகஸந்தேஶ ஹம்ஸஸந்தேஶங்களுடைய குணநிபந்தநமான தாரதம்யத்தை விசாரிக்கும் ஒரு முகவுரையுடனும் வெளியிட்டிருக்கின்றார். இந்த வெளியீட்டினுடைய அழகாலும் ராஸிக்யத்தாலும் முகரிதராய் நாமும், கவிதார்க்கிக ஸிம்ஹத்தின் திவ்ய ஸூக்தியின் ரஸத்தைக் கொஞ்சம் ஆஸ்வாதிக்க உத்யோகிக்கின்றோம்.

ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேஶம்

முகவுரையில் ஸ்ரீ துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ஹம்ஸ ஸந்தேஶத்தின் உயர் நல முடைமையைப் பஹு அழகாகவும் பஹுப்ரகாரமாகவும் விசாரித்திருக்கிறார். முதலில், "ஸந்தேஶ காவ்யங்களுள் முதன்மை பெற்றதான மேகஸந்தேஶம் இருக்க, அதைப்போன்ற வேறொரு ஸந்தேஶ காவ்யத்தை ஸ்ரீ தேஶிகன் ஏன் இயற்றவேண்டும்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டு, அதற்கு ஸமாதாநமாக, 'இவர் காளிதாஸனுடைய காவ்யங்களில் நிகரில்லாத கௌரவம் வைத்தவரென்றும், இதற்கு அவர் காளிதாஸனுடைய ரகுவம்ஶத்தை அநுஸரித்து யாதவாப்யுதத்தை இயற்றியதே போதிய சான்றும்' என்றும் பரிஹாரம் செய்திருக்கிறார். இம்மாதிரி ஒரு ஸமாதாநத்தைச் சொல்லிவிட்டு, மற்றுமொரு ஏற்ற ஸமாதாநத்தையும் சொல்லியிருக்கிறார். மேக ஸந்தேஶத்தில் ரஸப்பெருக்கு அளவற்று இருக்கையிலும் சிற்சில

தோஷங்கள் இங்குமங்கும் காணப்படுகின்றன; அந்த ரஸப் பெருக்குக்கு எவ்வித குறைவையும் செய்யாமல், அந்தத் தோஷங்களை நிவ்ருத்தி செய்து மற்றொரு காவ்யம் இயற்றினால், அது அந்தக் காவ்யத்தின் ரஸத்தை அதிகரிக்கச் செய்வதுடன், மஹாங்களான ரஸிகரெல்லாராலும் மிகவும் ஆதரிக்கப்படும் என்னும் ஒரு கருத்தும் ஸ்ரீ தேசிகன் திருவுள்ளத்தில் இருக்கலாமென்றும் பேசுகிறார். ஸ்ரீ தேசிகன் காளிதாஸனிடத்தில் மஹத்தான கௌரவ புத்தியுடன் கூடினவர் என்பது உண்மையே. மேகஸந்தேசத்தில் தென்படும் அஜ்ஞாத குலகோத்ரனை ஒரு ஸாமாந்ய யக்ஷனைக் கதாநாயகனாகவும் ஸ்திரரூபமற்றுப் புகைபோல ஒரு க்ஷணத்தில் காணமற் போகக்கூடிய ஒரு அசேதநத்தைத் தூதனாகவும் அமைப்பது முதலான தோஷமொன்றுக்கும் கொஞ்சமேனும் ப்ரவேசம் கொடாமல், ஆபிஜாத்யத்தாலும் பராக்ரமத்தாலும் ஸகல கல்யாண குணங்களாலும் நிறைந்துள்ள ஒரு மஹா புருஷனைக் கதாநாயகனாகவும், பறவையிற் சிறந்ததான ஹம்ஸத்தைத் தூதனாகவும் ஒரு வைலக்ஷண்யம் தோற்ற ஸ்ரீ தேசிகன் தமது ஹம்ஸஸந்தேசத்தில் அமைத்திருப்பதானது அவர் சீர்திருத்தத்தில் நோக்குக் கொண்டிருக்கிறார் என்பதை ஸூசிப்பிக்கின்றது என்பதும் உண்மையே. இம்மாதிரியான அபிஸந்திகளுடன் மற்றுமொரு அபிஸந்தியும் அவருடைய திருவுள்ளத்தில் இருந்திருக்க வேண்டுமென்று நமக்குத் தோன்றுகிறது. ஸ்ரீ தேசிகன் ஸகல சேதநர்களிடத்திலும் அளவற்ற வாத்ஸல்யம் கொண்டுள்ளவரானதால், ரஜோ குணம் தலையெடுத்து அந்தக் காரணத்தால் காமப்ரவணராயிருக்கும் ஜநங்களுக்கும் ஹித தமத்தைப் போதிப்பித்து அவர்களையும் உஜ்ஜீவிப்பிக்க வேண்டும் என்னும் அபிஸந்தியும் அவரை இந்தக் காவ்யம் இயற்றுவதில் ப்ரேரிப்பித்திருக்கலாமென்று நாம் நினைக்கிறோம்.

லௌகிக விஷயங்களில் உக்ரமான அபிநிவேசமுள்ளவர்களை அவைகளிலிருந்து, திருப்புவதானது அவரவர்களுடைய ப்ரக்ருதிக்கு அநுகுணமான விஷயங்களையே காட்டி அவரவர்களுக்கு நன்மையைச் செய்யக் கூடிய அம்சத்தை அவர்களுக்குத் தெரியாமலே அவைகளுடன் கலந்து புகட்டுவதால் ஏற்படுமே தவிர்த்து, முரட்டுத் தனமாகத் தடுப்பதால் ஒருகாலும் ஏற்படமாட்டாது. “தாංவ௵ிஸாயி௶நஃ வா௱திரா: விதிராஜிஷீஷுதூர ஊாநாஹாவெ வளய௶ாஜிநா வூணஸூஜீ” என்பது தாத்பர்ய சந்த்ரிகை திவ்யஸூக்தி. ஸ்ரீ கீதாபாஷ்யத்திலும் “தவாதூஜிஜீ

யாண)ாஷள நியசூ)" என்னும் ஸ்லோகத்தில் காணப்படும் "நியசூ)" என்னும் ஶப்தத்தின் கருத்தை விவரிக்குமிடத்தில், அந்த ஶப்தம் வ்யாபாரங்களின் அத்யந்த உபரமத்தைச் சொல்லவில்லை என்றும் இந்த்ரிய வ்யாபாரங்களுக்கு அநுரூபமான கர்மயோகத்தில் செலுத்துவதையே குறிக்கின்றதென்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் அநுக்ரஹித்திருக்கிறார். அபதத்தில் ப்ரவர்த்திக்கிறவர்களை ஸந்மார்க்கத்தில் திருப்ப முயலும் பெரியோர்களெல்லாரும் இந்த ந்யாயத்தையே அநுஸரிக்கிறார்கள் என்பது ப்ரஸித்தம். அந்த உபாயத்தையே ஸ்ரீ தேஶிகனும் ப்ரக்ருத விஷயத்தில் கைப்பற்றியிருக்கிறார். காம ப்ரவணனாயிருக்குமொருவனுக்கு, ததநுரூபமான காமோத்தீபகக் கதைகளைச் சொல்வதானது எப்படி அவனை உஜ்ஜீவிப்பிக்கும் உபாயமாகும்? என்று ஒரு கேள்வி ஜநிக்கலாம். மேகஸந்தேஶத்திற்கும் ஹம்ஸ ஸந்தேஶத்திற்கும் உள்ள வாசி இவ்விடத்திலேயே சோபிக்கின்றது. மேக ஸந்தேஶ கதை ஒரு ஸாமாந்ய மநுஷ்யனைப்பற்றியது; ஹம்ஸ ஸந்தேஶத்தின் கதையோ ஹேயகுணங்களுக்கெல்லாம் ப்ரத்யநீகனாயுள்ள மஹா ப்ரபுவைப்பற்றியது. அவனுடைய கதையானது வஸ்து ஸாமர்த்யத்தாலேயே பாபங்களெல்லாவற்றையும் போக்கக்கூடியதன்றோ? "ஹரிர்ஹரதி பாபாநி து:ஷ்டசித்தைரபி ஸ்ம்ருத:" [எவ்வித பக்தியு மின்றிக்கே 'ஹரி:' என்னும் ஶப்தத்தை மாத்ரம் உச்சரிக்கிறவனும் ஒருவித பரிசுத்தியை அடைகிறான்] என்பது ப்ரஸித்தமன்றோ? தாபோபஶமநத்தை மாத்ரம் உத்தேஶித்துக் கங்கையில் ஒருவன் ஸ்நாநம் செய்தாலும், அந்தக் கங்காதீர்த்தத்தின் ஸம்பந்தம் அவனுக்கு ஒருவிதப் பரிசுத்தியையும் செய்கின்றதன்றோ? இந்தக் கருத்து ஸ்ரீ துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் ப்ரஸ்தாவிக்கப்படவில்லை என்பது இல்லை. "ஶ்ரேயஸாம் ஸ்ராஷ்டி ஹேதவ:" என்பதைப்பற்றி ப்ரஸ்தாவிக்குமிடத்தில், 'இந்தக் காவ்யம் ஸ்ரேயஸ் என்னும் பெரும்பேற்றையும் படிப்பவர்களுக்கு அளிக்கும்' என்னும் வாக்யத்தால் இது குறிக்கப்பட்டிருக்கின்றது. அதை விஶதமாகவும் ந்யாய புரஸ்ஸரமாகவும் விவரிக்கவேண்டுமென்று எண்ணியே நாம் இதை ப்ரபஞ்சித்தோம்.

மற்றுமொரு விஷயமும் இந்த ஸந்தர்ப்பத்தில் விஜ்ஞாபித்துக்கொள்ளத் தகுந்ததாகத் தோன்றுகிறது. விப்ரலம்ப ஸ்ருங்காரத்தை வர்ணிக்கும் ஸாமாந்ய காவ்யங்களில் கதாநாயகர்களெல்லாரும் ப்ராயேண மதந பீடையால் தமக்கு நேரும் துயரங்களைப்பற்றிப் பேசுவதைப் பார்க்கிறோமே தவிர்த்து, காருண்யத்

தாலாவது ஆந்ருஶம்ஸ்யத்தாலாவது ஏற்படும் துயரங்களைப்பற்றிப் பேசுவதை நாம் பார்க்கிறோமில்லை. மேகஸந்தேஶத்திலும் அம்மாதிரியே தென்படுகின்றது. ஹம்ஸ ஸந்தேஶத்திலோவென்றால், ஆதிகவி வால்மீகி மஹர்ஷி, ஸ்ரீ ராமசந்த்ரனுடைய துயரங்களை நன்றாக உணர்ந்துள்ள சிறிய திருவடிமுகமாக,

“ ஜயம் ஸா யத்ருதெ ராமெ௱ து௱ஹிபி: வரிதவ்யதெ ।
காரு௱ண்யெந ஆந்ருஶம்ஸ்யெந ஶொகெந மதநெந ச ॥”

[இவளை நினைத்தன்றோ ஸ்ரீ ராமன் நாலுவித துயரங்களால் கஷ்டப்படுகின்றான்? அபலையான ஸ்த்ரீ ஶத்ரு வஶமாகிக் கஷ்டப்படுகிறாளே என்று கருணையாலும், ஆஶ்ரிதையை ஸம்ரக்ஷியாமல் விட்டுவிட்டோமே என்று ஆந்ருஶம்ஸ்யத்தாலும், அநர்க்கமான ஒரு வஸ்து நஷ்டமாகிவிட்டதே என்று ஶோகத்தாலும், தம்முடைய ஆநந்தத்திற்கு ஹேதுவாயிருந்த ப்ரியை தவறிவிட்டாளே என்று காமத்தாலும் பீடிக்கப்படுகிறார்] என்று விவரித்திருப்பதை அநுஸரித்து, ஸ்ரீ தேஶிகனும், நாலுவித காரணங்களாலும் உண்டாகும் தாபத்தை வர்ணித்திருப்பது கவனிக்கத்தக்கது. ஜகத்பிதாவாக இருக்கும் மஹா ப்ரபுவுக்குப் பரதுக்க நிராசிகீர்ஷையன்றோ ப்ரதாநம்? ஆஶ்ரித ஸம்ரக்ஷணமும் அதை அபேக்ஷித்துக் கொஞ்சம் அப்ரதாநமென்பதை த்யோதிப்பிக்கிறதற்காகவே ஸ்ரீ வால்மீகி காருண்யத்தை முதலிலும் ஆந்ருஶம்ஸ்யத்தை அதற்குப் பிறகுமே நிவேஶித்தார். மதந தாபமும் ஸ்ரீ ராமனிடத்தில் உண்டு. “ வயொ஽ஸ்யா ஹ்யதிவததெ ” [ஸீதையின் யௌவநம் வீணாகின்றதே] என்று அவர் வருத்தப்பட்டிருக்கிறார். ஆனால் அது சரமம் என்பதும், ஸ்ரீ ராமாயண ஶ்லோகத்திலிருந்தே தெரிகின்றது. இதுவும் ஒரு ஏற்றத்திற்குக் காரணம்.

ஆனால், ‘விப்ரலம்ப ஶ்ருங்காரத்தை விஸ்தாரமாக வர்ணிக்கும் நாச்சியார் பாசுரங்களிலும் பராங்குச பரகாலாதிகள் ஸ்ரீ ஸூக்திகளிலும், இம்மாதிரி காருண்யாதி நாற்குணங்கள் தலையெடுத்து நிற்பது காணப்படவில்லையே; துயரப்படுமவர், காமத்தால் தமக்கு ஏற்படும் துயரத்தைப்பற்றி மாத்ரம் பேசியிருக்கிறார்களே. இது அந்த ஸ்ரீ ஸூக்திகளுடைய மஹிமையின் குறைவுக்குக் காரணமாவதாக ஒருவரும் ஶங்கிக்கவில்லையே’ என்று ஒரு கேள்வி பிறக்கலாம். இவ்விதம் கேட்போர்கள், அந்த ஸ்ரீ ஸூக்திகளெல்லாம் தலைவனைப் பிரிந்த தலைவியின் பாசுரங்களென்பதைக் கவனிக்கவேண்டும். ஸ்த்ரீகளின் துயரம்

புமான்களுக்கு ஏற்படும் துயரத்தைக் காட்டிலும் அநேக மடங்கு தீவ்ரமானதாலும், கதாநாயகனாக அமைக்கப்படும் தலைவன் தீரோதாத்தனாகவே அமைக்கப்படுகிறபடியாலும், தலைவி தலைவர்களுடைய வார்த்தைகளில் பரஸ்பரம் ஒருவித விசேஷம் இருப்பது ஸ்வபாவ ஸித்தம். மேலும், ப்ரக்ருத ஹம்ஸ ஸந்தேசத்தில் தலைவனாக அமைக்கப்பெற்றிருப்பவன் ஸாமாந்ய மநுஷ்யனன்று; காருண்யத்தையும் ஆச்ரித ஸம்ரக்ஷணத்தையும் வ்ரதமாகக் கொண்டவன். அப்படிப்பட்ட மஹாபுருஷன் விஷயத்தில் கருணையையும் ஆந்ருசம்ஸ்யத்தையும் ஸூசிப்பிக்கும் வார்த்தைகள் ஓங்காமல், கேவலம் காமதாபத்தால் தமக்கு ஏற்படும் துயரத்தைப்பற்றிய பேச்சுக்கள் ஓங்கி நிற்குமோ?

இவை போன்ற மற்றை ச்லாகநீயங்களான ஏற்றங்கள் பல உள. ரஸ விசேஷங்களிலும் பத ரசனையிலும் ஸ்ரீ தேசிகன் தமது க்ரந்தத்தில் கணக்கற்ற உயர்ந்த சீர் திருத்தங்களைச் செய்திருக்கிறார். அவருடைய திவ்யஸூக்திகளை ஊன்றிப் படிப்பவர்களுக்கு அந்தச் சீர்திருத்தங்கள் நன்கு விளங்கும்.

ஸ்ரீ:

திருத்தங்கள்

(1) சென்ற ஸஞ்சிகையில் 28-வது பக்கத்தில், 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கரைப்பற்றி எழுதி வருகையில், "அவர் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினபொழுது ரூ. 70,000 ரொக்கம் இருந்தது" என்று எழுதப்பட்டிருக்கிறது. அது சரியன்று என்றும், அதில் அர்த்தாம்சத்திற்குக் கொஞ்சம் அதிகமாக மாத்திரம் இருந்ததென்றும் நாம் அறிகின்றோம். இப்பொழுது அந்தத் தொகையில் பெரும்பாகம் ஸ்ரீ அழகியசிங்கருடைய கைங்கர்யத்தில் செலவாகிவிட்டதாம். ஸமீபத்தில் நேரும் யாத்ரை புறப்படுவதை உத்தேசித்து வண்டி மாடு முதலியவைகளை வாங்குவதிலும் இன்னும் மற்றை அவசியமான விஷயங்களிலும் பாக்கித் தொகையும் செலவாகி வருகின்றதாம். இந்த ஸமாசாரம் ஸ்ரீ ஸந்நிதியிலிருந்தே கிடைத்திருக்கிறபடியால் இதுவே நம்பத்தக்கது.

(2) சென்ற ஸஞ்சிகை 4-வது பக்கம் 12-வது 16-வது வரிகளிலுள்ள "ஸ்ரீ வரத விஷ்ணுவாசார்யர்" என்பது "ஸ்ரீ வரதாசார்யர்" என்று திருத்தப்படுகின்றது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய யாத்ரோத்ஸவம்

நிகழும் தைமீ 6உ திங்கள்கிழமைதினம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை யாத்ரோத்ஸவமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர், ஸ்ரீ தஶாவதார ஸந்நிதியிலிருந்து புறப்பட்டு உ.தங்முகமாகத் திருவள்ளறைக்கு எழுந்தருளினர். அவ்விடத்தில் ஆராதனாதிகளைச் செய்துகொண்டு ஸாயம் மறுபடியும் ஸ்ரீரங்கம் எழுந்தருளி, இப்பொழுது ஸ்ரீரங்கத்தில் அநேக ந்ருஸிம்ஹ பக்தர்களுடைய ப்ரார்த்தனையின் பேரில் அந்தந்த பக்தர்களின் க்ருஹத்திற்கு ஸ்ரீ ஶரண்யனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அவ்வவ்விடங்களில் உத்ஸவத்தைக் கண்டருளப் பண்ணிக்கொண்டு வருகிறார் என்று நாம் கேள்விப்படுகிறோம். இது அளவற்ற ஆனந்தத்தை எல்லாருக்கும் ஜநிக்கக்கூடிய ஸமாசாரம்.

நாளது வ்ருஷ௵ தைமீ 10உ வெள்ளிக்கிழமை தினம் ஸ்ரீரங்கம் வடக்கு உத்திரவீதியிலிருக்கும் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியருடைய பிரார்த்தனையின்பேரில் ஸ்ரீ அழகியசிங்கர் டோளோத்ஸவத்தை நடத்துவதர்காக மாலை 7 மணிக்கு ஷெ வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியருடைய க்ருஹத்திற்கு ஸர்வ பரிஜநங்களோடும் பரிச்சதங்களோடும் ஸ்ரீ கண்ணபிரானை திருப்பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு தாமும் மற்றொரு திருப்பல்லக்கில் எழுந்தருளினர்.

வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியரும் அநவதிக பக்தியோடு தனது க்ருஹத்திற்கு எழுந்தருளின அவ்வெம்பெருமானையும் ஸ்ரீ அழகிய சிங்கரையும் பூர்ணகும்பத்துடன் எதிர்கொண்டு தண்டன் ஸமர்ப்பித்து அவ்வெம்பெருமான் எழுந்தருளி இருப்பதற்காக அலங்கரித்திருந்த ஓர் இடத்தில் ஸ்ரீகண்ணபிரானை எழுந்தருளப்பண்ணித் தமதுசக்திக்கு அநுகுணமாக அதிகமாக ச்ரத்தையுடன் ஆராதித்தார்.

அக்காலத்தில் ஷெயார் க்ருஹத்துக்கு அனேகம் வித்வான்களும் தனவான்களும் அளவிறந்த ஆஸ்திகர்களும் நவரத்நங்கள் நிறைந்த ஸ்வர்ணமயமான டோலையில் ஸர்வாபரணபூஷிதனுய் எழுந்தருளி இருந்த ஸர்வேச்வரனுடைய திவ்யஸௌந்தர்யத்தை அநுபவித்து அளவில்லாத வானந்தத்துடன் வீற்றிருந்தார்கள்.

பிறகு ஷெ ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்ரீ அழகியசிங்கரிடம் சென்று அம்மானாழிப்பிரான் அவன் எவ்விடத்தான் என்கிறபடியே வானவர் தம்மையாளுமவனும் நான்முகனும் சடைமுடியண்ணலும் செம்மையால வன் பாதபங்கயம்சிந்தித்தேத்தும் அவ்வீச்வரன்பெருமைக்குப்பொருந்த

ப்ரஹ்மாத்யாஸ்ஸுரா நாயஶ்ச மஹர்ஷயாஸ்ஸதா |
யத்ப்ராஹுர்யுஷ்யத்ஸ்த்ரீதர்ஹ ஶரண்யாவஜீவந: ||

என்று நாடாத மலர் நாடி அம்மான் தன்னடியிணைக்கீழ் அவர்களிட்டு கைகளாலாறத் தொழுதிருந்த மாவாகாருதி மகாபுருஷர்களுடைய மகிமையில்லாது மிடியனை, வடியேனைப் பொருளாக்கி எழுந்தருளின இவ்வீச்வரனை ஒருவிதத்தினுலு மாராதிக்க யோக்யதை யில்லாத அடியே

னுடைய வாசிககைங்கர்ய ரூபமான சிலஸம்ஸ்க்ருத ச்லோகங்களை கேட்டருளவேணுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் அவருடைய பக்திமகிமையாலுள்கறைந்துருகிவழிந்த சொற்களைக்கேட்டு அகமகிழ்ந்து அப்படியே ஆகட்டுமென்றருளிச்செய்ய ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்ரீகண்ணபிரானுடையவும் ஸ்ரீ அழகியசிங்கருடைய கல்யாணகுணங்கள் விஷயங்களாகவும் சில ச்லோகங்களைச் சொல்லி அவைகளின் தாத்பர்யத்தையும் வர்ணித்தார். ஸமஸ்தகல்யாணகுணநிதியான ஸர்வேச்வரனுடைய குணங்களையும் ஸ்ரீ அழகியசிங்கருடைய ஆச்சர்யாவஹங்களான மகிமைகளையும் பொருளின் பெருமைக்குப் பொருந்தின சொல்லழகையும் கேட்டு அங்குவந்திருந்த வித்வான்கள் மிகவும் ஸந்தோஷித்தார்கள். பிறகு ஸ்ரீரங்கம் வீணை வித்வான் ஸ்ரீ உ. வே. இராமஸ்வாமி அய்யங்காருடைய இணையில்லா இன்னிசையாழினுடைய அழகானகானம் ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளோடு கலந்து ஆரம்பிக்கப்பட்டது. ஸர்வமனோரஞ்ஜகமான காயகருடைய கண்டத்வனியோடும், செவிக்கினிய செம்சொல்லான ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளோடும் கூடிய ஸங்கீத சாஸ்த்ரானுஸாரியான அந்த யாழியினுடைய இனிதான கானரஸத்தை கானப்ரியனை ஸ்ரீக்ருஷ்ண பகவானும் ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்தி ஸாரவேதியான ஸ்ரீ அழகியசிங்கரும் கானரஸதத்பரர்களான மற்றும் மஹாஜனங்களும் அனுபவித்து ஆனந்தபரவசர்களானார்கள்.

பிறகு ஸ்ரீஸன்னிதியினுடைய ஸம்பாவனையும்ஸர்வஜனங்களுக்கும் சந்தனம் தாம்பூலம் பழம் சர்க்கரைகளும் விநியோகம் செய்யப்பட்டன. ஸ்ரீ அழகியசிங்கர் வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியருக்கு மந்த்ராக்ஷதையோடு சந்தன தாம்பூலமாலாதிகளையளித்து அவரை அனுக்ரஹித்துவிட்டு அவருடைய க்ருஹத்திலிருந்து ஸ்ரீ கண்ணபிரானை திருப்பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு பரிஜநங்களுடனும் பரிச்சதங்களுடனும் ஸர்வஜனங்களுடைய ஸ்தோத்ரவாக்யத்தினுடனும் ஆச்ரமத்திற்குத் திரும்பி எழுந்தருளினார்.

இப்படி ஸ்ரீ அழகியசிங்கருடைய முதல் டொளோத்ஸவ யாத்ரை எல்லோருக்கும் ஸந்தோஷ ஸம்ருத்தியோடு நடைபெற்றது.

ஸம்ஸ்க்ருதம்—தமிழ்—ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய புஸ்தகங்கள்

ஆழ்வார்கள் அருளிய பிரபந்தங்கள், அவற்றிற்குப் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த வியாக்யானங்கள் - இவை தமிழிலும் தெலுங்கிலும், ஸ்ரீகூரத்தாழ்வான் பட்டர் உடையவர் தேசிகன் முதலிய பூர்வாசார்யர்கள் அருளிச்செயல்கள் நாகரம் தெலுங்கு க்ரந்தம் முதலிய லிபிகளிலும், ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த திராவிட ப்ரபந்த வ்யாக்யானம் தமிழும் க்ரந்தாக்ஷரமும் கலந்த மணிப்ரவாள நடையிலும், ஸ்ரீ சங்கராசார்யர் மத்வாசார்யர் க்ரந்தங்களும் அவற்றின் வ்யாக்யானங்களும், ஸமஸ்கிருத புஸ்தகங்களில் காவ்ய நாடகாலங்காராதிகளும், மற்றும் தமிழ் ஸம்ஸ்கிருதம் எனும் உபய பாஷைகளில் விளங்கும் ப்ராசீனமான அபூர்வ உத்க்ரந்தங்களும் விலை ஸரஸமாக அடியிற்கண்ட விலாஸத்திற் கிடைக்கும். புஸ்தகங்கள் நல்ல காகிதத்தில், தெளிவாக அச்சிடப்பட்டு, உயர்ந்த கட்டுக்கோப்புடன் விளங்கும். வேண்டுவோர் எழுதிப் பெறலாம்.

விலாஸம் :— A. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்,

200, லிங்கிச் செட்டித் தெருவு, மதராஸ்.

2/10/00

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியைக்கு இந்த மாஸத்தில் சந்தாவைச் செலுத்தினவர்களின் பெயர்.

1—1—'42 to 26—1—'42

		Rs.
1.	Sri V. Rangaswami Iyengar, Mohanur ...	3
2.	,, M. N. Srinivasa Raghavan ,, ...	3
3.	,, M. Srinivasachariar, Tiruvellore ...	3
4.	,, M. Rajagopalachariar ,, ...	3
5.	,, Palaveri Krishnamachari , ...	3
6.	,, S. M. Ranganathachariar ,, ...	3
7.	,, E. M. Narasimhachariar ,, ...	1
8.	,, E. Ramanujachariar ,, ...	1
9.	,, V. Lakshiminarasimhachariar ,, ...	1
10.	,, K. N. Desikachariar ,, ...	1
11.	,, K. N. Ramaswami Iyengar, Madura	3
12.	,, C. Krishnaswami Iyengar ,, ...	3
13.	,, N. R. Krishnaswami Iyengar ,, ...	3
14.	,, V. R. Narayanan, Kedambakkam ...	3
15.	,, T. G. Ramaswami Iyengar Devakottah ...	3
16.	,, R. L. Narayanan, Calcutta ...	3
17.	,, V. Rangaswami Iyengar Tindivanam ...	3
18.	,, S. Rangaswami Iyengar ,, ...	3
19.	,, K. Viraraghava Iyengar, Namakal	3
20.	,, K. Soundararajan, Sigaperumalkoil	3
21.	,, P. S. Thirumalai, Vridunagar ...	3
22.	,, M. R. Rangaswami Iyengar Periyakulam ...	3
23.	,, A. Srinivasa Raghava Iyengar Srirangam ...	3
24.	,, V. Rangachari ,, ...	3
25.	,, M. Ramaswami Iyengar, Shiyali ...	3
26.	,, G. Souriraja Iyengar ,, ...	3
27.	,, V. K. Venu Iyengar, Kilasavalpatti	3
28.	,, T. S. Thiruvenkatachari Vridachalam ...	3
29.	,, C. N. Srinivasagopalachari, Tiruvadi	3
30.	,, A. Rangachari Karaikudi ...	3
31.	,, S. Venkatachari ,, ...	3
32.	,, L. Sriramachar Arani ...	3
33.	,, Perumal Reddiar, Chevanthampatti	3
34.	,, M. P. Kannuswami Reddiar Peruvalappur ...	3
35.	,, P. V. Kuppuswami Iyengar Panthalgudi ...	3
36	,, T. S. Pichu Iyengar Thirukurangudi ...	3
37.	,, M. S. Krishnamachari, Bangalore ...	3
38.	,, P. R. Krishnaswami Iyengar ,, ...	3
39.	,, G. Srinivasachari, Erode ...	3
40.	,, J. Varadaraja Iyengar, Vannarpet	3
41.	,, T. S. Narasimhachari Tharmapuram ...	3
42.	Sri P. S. Narayana Iyengar, Mannargudi	3
43.	,, K. Viraraghava Iyengar, Karur ...	3
44.	,, D. P. Chellam Iyengar, Villupuram	3
45.	,, Venkataraghava Iyengar, Salem ...	3
46.	,, K. R. Narasimha Raghavan ,, ...	3
47.	,, Ragu. Narasimhachari, Tinnanur ...	1
48.	,, C. Rajagopalachari. Tyagarayanagar	1
49.	,, R. V Raghavan, Alwarpet ...	3
50.	,, C. A. Venkatachari Nungambakkam ...	3
51.	,, W. Krishnaswami Iyengar Mylapore ...	3
52.	,, K. V. Sesha Iyengar ,, ...	3
53.	,, S. Soundaraja Iyengar ,, ...	3
54.	,, A. C. Srinivasachari ,, ...	3
55.	,, K. R. Krishnaswami Iyengar Old Mambalam ...	3
56.	,, N. K. Srinivasa Iyengar, Guindy ...	3
57.	,, T. K. Srinivasa Iyengar, Madras ...	3
58.	,, K. Rajagopalan Bombay ...	3
59.	,, S. Raghavachari ,, ...	3
60.	,, K. Rajagopalan ,, ...	3
61.	,, M. S. Aravamuda Iyengar ,, ...	3
62.	,, V, K. Raghavachari ,, ...	3
63.	,, R. Srinivasan ,, ...	3
64.	,, S. Sarangapani Iyengar ,, ...	3
65.	,, N. S. Chari Bombay ...	3
66.	,, A. G, Narasimha Iyengar ,, ...	3
67.	,, C. S. Iyengar ,, ...	3
68.	,, R. A. Seshadri ,, ...	3
69	,, M. K. Srinivasa Iyengar ,, ...	3
70.	,, K. Jaganath ,, ...	3
71.	,, S. Ramaswami ,, ...	3
72.	,, B. Venkatasesha Iyengar ,, ...	3
73.	,, M. K. Aravamuda Iyengar ,, ...	3
74.	,, V. K. Panthulu ,, ...	3
75.	,, T. K. R. Iyengar ,, ...	3
76.	,, V. V. Iyengar ,, ...	3
77.	,, Kethandipatti Narasimhachari ,, ...	3
78.	,, R. Rangachari ,, ...	3
79.	,, D. Ramaswami Iyengar ,, ...	3
80.	,, S. Varadachari ,, ...	3
81.	,, M. S. Bashyam ,, ...	3
82.	,, K. S. Srinivasagopalan ,, ...	3
83.	,, S. Ramaswami ,, ...	3
84.	,, S. Krishnamachari ,, ...	3
85.	,, S. Rajagopala Iyengar ,, ...	3
86.	,, S. S. Rajagopala Iyengar ,, ...	3
87.	,, A. Narasimhachari ,, ...	3
88.	,, R. Krishnaswami ,, ...	3
89.	,, T. T. Rajagopalan Chetpet ...	3

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபநம்

1. இந்தப் பத்திரிகையின் வர்ஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதிப் பத்ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வர்ஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினல், அந்த மாறுதலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

★

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களையெல்லாம் நாகர லிபியில் எழுத வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்பட்டிருக்கும் பக்ஷத்தில், உடனே திருப்பி அனுப்பப்படும்.

: ஆபீஸ் விலாஸம் :

நெ. 5, இராமசாமி தெரு, தியாகராயநகர், மதராஸ்.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Thyagarayanagar, Madras.